Registered as a Newspaper | பக்கங்கள் 16 | விலை ரூ. 50

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 228

புதன்கிழமை 12 ஜூலை 2023

ஆனி 27 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



வடக்குமாகாணத்தில் நேற்று

# சரத் வீரசேகரவுக்கு எதிராக சட்டத்தரணிகள் போராட்டம்!

## நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்த வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 12

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, தமிழ் நீதிபதிகளை அச்சுறுத்தும் வகையிலும் அவமதிக்கும் வகையிலும் கருத்துத் தெரிவித்திருந்த நிலையில் சரத் வீரசேகரவுக்கு எதிராகவும், நீதிமன்றத்தில் சுயாதீனத்தை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும் வடக்கு மாகாணத்தில் நேற்றையதினம் சட்டத்தரணிகள் பணிப்புறக் கணிப்பை மேற்கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். »15

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்;

## ரூ. 1.5 மில். இழப்பீடு; செலுத்தினார் மைத்திரி

மிகுதிப்பணம் 10 தவணைகளில்

கொழும்பு, ஜூலை 12

ஈஸ்டர் தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால »15

## நேற்றைய போராட்டத்திலும் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தல்

முல்லைத்தீவு, ஜூலை 12

நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி, முல்லைத்தீவு »15

சரத் வீரசேகரவின் கருத்து

## நீதித்துறைக்கு எதிரான மோசமான தாக்குதலே!

### சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

கொழும்பு, ஜூலை 12

நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ் நீதிபதிகளுக்கு எதிராகத் தெரிவித்த கருத்து, நீதித்துறை மீதான மோசமான தாக்குதலே என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:- »15

## வித்தை காட்டுகிறீர்களா?

தொலைத்தொடர்புக் கோபுரத்துக்கு எதிராக போராடிய மக்களிடம் பொலிஸார் கேள்வி!

விரிவு:- பக் - 15 இல்







Digitized by Noolaham Foundation



# மருத்துவமனை மரணங்கள்: மயக்கமருந்து காரணமல்ல

சுகாதாரசேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 12**

**மருத்துவமனைகளில் அண்மைக்காலமாகப் பதிவாகிய மரணங்களுக்கும், அவர்களுக்குச் செலுத்தப்பட்ட மயக்கமருந்துகளுக்கும் தொடர்பில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கண்டி மருத்துவமனையில் பூஞ்சை நோய் காரணமாக 7 நோயாளர்கள் உயிரிழந்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானவையாகும். குறித்த நோயாளர்களின் மரணத்துக்கான காரணம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனையில் ஜனவரியில் ஒரு மரணமும், ஜூன் மாதம் 5 மரணங்களும் பதிவாகியுள்ளன. அவை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு உயிரிழந்த நோயாளர்களுக்குப் பயன்படுத்தப்பட்ட மருந்து தற்போது பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று அண்மையில் கொழும்பு தேசிய கண் மருத்துவமனையில் பெண்ணொருவர் உயிரிழந்திருந்தார். அவரது மரணத்துக்கான காரணம் இருதய நோய் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாறாக செய்திகளில் வெளியாகியுள்ளதைப் போன்று மயக்க மருந்து காரணமாக அவர் உயிரிழக்கவில்லை. இவ்வாறு பதிவாகும் மரணங்களை மறைக்க வேண்டிய தேவையோ அல்லது அவை தொடர்பில் பொய்யான காரணிகளை வெளிப்படுத்த வேண்டிய தேவையோ சுகாதார அமைச்சுக்குக் கிடையாது - என்றார் (ம)

## சீனா ஆக்கிரமிப்பைத் தடுக்க வலுவான திட்டம் அவசியம்

வடக்கு கடற்றொழிலாளர் இணையப் பேச்சாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

இலங்கைக்கு கடனை வழங்குகின்ற சீனா போன்ற நாடுகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் வடக்கு மீனவர்கள் பாதிப்படைவது தடுக்கப்படவேண்டும். அதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் ஆலம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கடற்றொழில் இணைய உறுப்பினர்களிடையேயான சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்குக் கடற்பரப்பில் கடலட்டைப் பண்ணைகள் விஸ்தரிக்கப்பட்டு சீனா நிரந்தரமாக கால் ஊன்றி வருகின்றது. எமது கடற்பிரதேசத்தில் தனது வர்த்தக இருப்பை நிலைநிறுத்திக்கொள்ள முயற்சிக்கின்றது. இதனால் வடக்குக் கடற்றொழில் வளங்கள் அருகி வரும் அபாயம் எழுந்துள்ளது. இத்தகைய ஆக்கிரமிப்பால் வடக்கு மீனவர்கள் பாதிப்படையக் கூடாது. மீனவர்கள் பாதிப்படையாத வகையில் ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்- என்றார். (ச-125)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

கிளிநொச்சி, ஜூலை 12

பல்கலைக்கழக அனுமதிபெறாத மாணவர்களுக்கான கல்வி விழிப்புணர்வு மற்றும் தொழில்வாய்ப்புத் தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. அவுஸ்திரேலியா அகச்சுடர் அமைப்பில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்குக்கான விண்ணப்பப்படிவங்களை nnerflameaustralia@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியைத் தொடர்பு கொண்டு பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி3)



## 46 இலங்கையர்களை நாடு கடத்திய குவைத்

கொழும்பு, ஜூலை 12

குவைத்துக்குப் பணியாளராகச் சென்று சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 46 இலங்கையர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை அவர்கள் வந்தடைந்துள்ளனர்.

நீண்டகாலமாக கடவுச்சீட்டின்றி சட்டவிரோதமாக குவைத்தில் தங்கியிருந்த இவர்கள், தாயகம் திரும்புவதற்காக இலங்கைத் தூதரகத்தில் பதிவு செய்திருந்த நிலையிலேயே இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இதேவேளை நாடு திரும்புவதற்காக குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான வீட்டுப் பணியாளர்கள் பதிவு செய்துள்ளனர் எனத் தூதுவர் காண்டீபன் பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (ச-இ)

## பனைசார் உற்பத்திக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஆடிப்பிறப்பை முன்னிட்டு வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து நடத்தும் "தால முற்றம்" பனைசார் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும், விற்பனையும் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 15ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 9 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன மற்றும் வடக்கு மாகாண மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சுச் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-ரி)




## நேர்முகத் தேர்வின்றி சேவையில் ஆறு பேர்

தெங்குப் பயிர்ச்செய்கைச்சபை மீது கோப் குழு அதிருப்தி

கொழும்பு, ஜூலை 12

நேர்முகத்தேர்வுக்குத் தோற்றாத அறுவர் முன்னாள் தலைவரின் விருப்பத்துக்கு அமைய பணியில் சேர்க்கப்பட்டுள்ளமை தொடர்பில் அதிருப்தி தெரிவித்துள்ள கோப் குழு, நிர்வாகக் கட்டமைப்பின் இந்த முறைகேடு தொடர்பில் இருவாரங்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் என்றும் தெங்குப் பயிர்ச்செய்கைச் சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் கடந்த வாரம் கோப் குழு கூடியது. இதன்போது தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை, தென்னைப் பயிர்ச் செய்கைச்சபை மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனங்களின் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இதில் தெங்கு நிறுவனங்களின் முன்னேற்றங்கள், வேலைத்திட்டங்கள் என்பன ஆராயப்பட்டன.

அதன்போது தென்னைப் பயிர்ச் செய்கைச்சபையின் நேர்முகத்தேர்வுக்குத் தோற்றாத 6 பேர் முன்னாள் தலைவரின் விருப்பத்துக்கு அமைய பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டமை தெரியவந்தது.

இதுதொடர்பில் கோப் குழு தனது அதிருப்தியை வெளியிட்டதுடன் இந்த விவகாரம் பற்றிய அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் வழங்கவேண்டும் என்றும் வலியுறுத்தியது. (ச-இ)



## எருமை மாடு துரத்தியதில் மாணவர்கள் ஐவர் காயம்

கொழும்பு, ஜூலை 12

பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த மாணவர்கள் ஐவரை எருமை மாடு துரத்தியதில் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஹல்துமுல்ல பத்கொட பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

பாடசாலைக்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது நபரொருவர் அழைத்துச் சென்ற எருமை மாடொன்றே குறித்த மாணவர்களைத் துரத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாகக் குடிபெயர்ந்தால் நாடுகடத்தலுடன் இனித் தண்டமும்

## அவுஸ்திரேலியா அரசு இறுக்கம்



**கொழும்பு, ஜுலை 12**

**அவுஸ்திரேலிய அர்சாங்கத்தின் கொள்கைகள் இறுக்கமாக்கப்பட்டுள்ள நிலையில், படகுகள் மூலம் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைவோர் நாட்டுக்கே திருப்பியனுப்பப்படுவதுடன் அவர்களிடம் தண்டப்பணமும் அறவிடப்படும் என அவுஸ்திரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.**

அவுஸ்திரேலியாவின் கூட்டு முகவர் பணிக்குழுவால் எல்லைகள் தொடர்பாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கையின் தளபதி ரியல் அட்மிரல் ஜஸ்டின் ஜோன்ஸ் கடந்த வாரம் கொழும்புக்கு வந்திருந்தார்.

இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கான சட்டவிரோத குடிப்பெயர்வைத் தடுத்தல் மற்றும் அதன் ஆபத்துகள் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்புக் கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள ஷங்கரிலா ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டது.

அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே ரியல் அட்மிரல் ஜஸ்டின் ஜோன்ஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையிலிருந்து சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்திரேலியா செல்வோரின் எண்ணிக்கை கடந்த காலங்களில் சடுதியாக அதிகரித்துள்ளது.

அதைத் தடுப்பதற்கு கூட்டிணைந்த நடவடிக்கைகளை இலங்கையும் அவுஸ்திரேலியாவும் முன்னெடுத்துவருகின்றன.

ஆள்கடத்தல் முயற்சிகள் முறியடிக்கப்படவேண்டும். ஆள்கடத்தலில் ஈடுபடுபவர்கள் சமூகத்துக்கு நன்மை செய்யும் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. மாறாகப் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களைப் பயன்படுத்தி பெருமளவு பணம் பெறுவதையே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைவோர் அவர்களது நாட்டுக்கே திருப்பியனுப்பப்படுவதுடன் அவர்களிடம் தண்டப்பணமும் அறவிடப்படும். எனவே சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் நுழையும் முயற்சிகளில் பொதுமக்கள் ஈடுபட வேண்டாம் - என்றார். (ச-இ)

## ஏறுமுகத்தில் சிபெட்கோ!

**கொழும்பு, ஜுலை 12**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 4 ஆயிரத்து 340 கோடி ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது என்று நிதி அமைச்சு வெளியிட்டுள்ள நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மசகு எண்ணெய் இறக்குமதிக்காக 277.1 மில்லியன் டொலரும், கனிம வள இறக்குமதிக்காக 43.4 பில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த ஆண்டு ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு இடையில், எரிபொருள் இறக்குமதிக்காக இலங்கைக்கு ஆயிரத்து 599.7 மில்லியன் டொலரும் செலவாகியுள்ளது.

இது மொத்த இறக்குமதிச் செலவில் 30 சதவீதமாகும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. (எ-ரி3)

## 7 சிறுநீரக நோயாளிகள் இரு மாதங்களில் சாவு!



கொழும்பு, ஜுலை 12

கண்டி மருத்துவமனையின் சிறுநீரகப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த 7 நோயாளிகள் இரண்டு மாத காலப்பகுதியில் உயிரிழந்துள்ளனர். அதற்கு உபகரணங்களில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இருக்கலாம் என்று மருத்துவமனை வட்டாரம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

சிறுநீரகம் செயலிழந்த நபரின் சிறுநீரகங்கள் 93 சத விதத்துக்கும் அதிகமாகச் செயற்படாவிடின் அவர்கள் ஹீமோடையாலிசிஸ் சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

ஏனைய நோயாளிகளுக்கு வீட்டிலிருந்து சிகிச்சை பெறப் பரிந்துரைக்கப்படுகிறது. நோயாளிகளுக்குத் தேவையான உபகரணங்கள் மருத்துவமனை மூலமே வழங்கப்படுகின்றன என்றும் கூறப்படுகிறது. (ச-இ)

## ரூ. 2 கோடி நகையை கடத்தியோர் கைது

நாட்டுக்குள் நகைகளைக் கடத்திய குற்றச்சாட்டில் இரு வர்த்தகர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சென்னை விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வர்த்தகர்களின் பயணப் பொதிகளில் இருந்து 2 கோடியே 80 லட்சம் ரூபா பெறுமதியான ஒரு கிலோ 780 கிராம் தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளன என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையில் இருந்து இலங்கை வந்த விமானத்தில் இவர்கள் பயணித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-ரி3)

### ரணிலின் இந்தியப் பயணம்

## இருநாட்டு வெளிவிவகார செயலர்கள் ஆலோசனை

**கொழும்பு. ஜுலை 12**

இலங்கை வெளிவிவகாரச் செயலாளர் அருணி விஜேவர்த்தன மற்றும் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் வினய் குவாத்ரா ஆகியோர் நேற்றுக்காலை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரு நாள் உத்தியோக பூர்வ பயணமாக எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தியா பயணமாகவுள்ளார். அவரது இந்தியப் பயணத்துக்கான முன்னேற்பாடுகள் தொடர்பாகவே இந்தச் சந்திப்பு நடைபெற்றது என்று கூறப்படுகின்றது. (எ-ரி3)







**வொ**லிபோல் (கரப்பந்தாட்டச்) சுற்றுப்போட்டி ஒண்டு தொண்டைமானாறில நடந்தது. யாழ்ப்பாணத்தில வொலிபோலில பலமா இருக்கிற ரண்டு ரீமும் மோதுற மட்ச் நடக்க இருந்தது எண்டதால, சனமும் அள்ளுகொள்ளையா வந்துட்டுதுகள். முதலில வேற ரண்டு ரீமுகளுக்கு இடையில மட்ச் நடந்தபிறகு, ரண்டாவதாத்தான் இந்த முக்கியமான, பரபரப்பான 'மட்ச்' நடக்கிற மாதிரித்தான், போட்டி அட்டவணை போட்டாச்சு. அண்டைக்கு இரவு ரண்டு மட்ச் நடக்கும் எண்டது சனத்துக்கும் தெரியும், ரெப்ரிமாருக்கும் (நடுவர்களுக்கும்) தெரியும். முதல் மட்ச் முடிஞ்சு. இனி எல்லாரும் ஆவலோட காத்திருந்த ரண்டு முக்கியமான ரீமுகள் மோதுற, மட்ச் தொடங்கப் போறதா அறிவிச்சினம். ரண்டு அணி வீரர்களும் கிரவுண்டுக்கையும் இறங்கிட்டினம். ஆனால் மட்ச் தொடங்கேலை. ஏன் மட்ச் இன்னும் தொடங்கேலை எண்டு முதல்ல சனத்துக்கு விளங்கேலை. பிறகுதான் 'ரெப்ரிமாரை' காணேலை எண்டதாலதான் மட்ச் தொடங்க லேட் எண்டு தெரிய வந்திச்சு.

அப்பிடி போட்டி நடக்கேக்க ஏன் ரெப்ரிமார் போனவை? 'எங்களுக்கு இண்டைக்கு ஒரு மட்ச் எண்டுதான் சொல்லியிருந்தவை. அதுக்கை ரண்டு மட்ச் நடத்திறதெண்டால் எங்களால ரெப்ரி பண்ண முடியாது. நேரமும் மட்டு மட்டு' எண்டு போட்டியை வைக்கிறவைக்கு மட்டும் சொல்லிப் போட்டு, ரெப்ரிமார் போயிருக்கினம். அங்க வந்த ரண்டு ரெப்ரிமாரில ஒருத்தரின்ர ரீமும் அந்த முக்கியமான மட்ச்சில விளையாட இருந்தது. அதால அவர் அந்த மட்சுக்கு ரூல்ஸ்படி 'ரெப்ரி' செய்ய ஏலாது. அதால ஓராள் மட்டும் நிண்டு அந்த மட்ச்சை நடத்த ஏலாது. எந்தெந்த ரீம் முதலே விளையாடப் போகுது எண்டு ரெப்ரிமாருக்கு அறிவிக்கப்பட்டதால, மூண்டாவதா ஒரு ரெப்ரியை வொலிபோல் சங்கம் அனுப்பியிருக்க வேணும். ஆனால் அவையும் பேய்க்குப் பேன் பார்த்தவை மாதிரி, கையில அகப்பட்ட ரண்டுபேரை அனுப்பியிருக்கினம் எண்டு சனம் கொந்தளிக்கத் தொடங்கிட்டுது. கடைசியில எல்லாரும் 'மட்ச்' நடக்கும் எண்டு காத்திருந்து ஏமாந்ததுதான் மிச்சம். ரெப்ரிமார் செய்த வேலையால சனங்களின்ர நேரமும், ரீமுகளின்ர நேரமும் வீணாப் போச்சு. போட்டியை நடத்தினவைக்கும் வீண் செலவு. பிறகு திரும்ப அந்த மட்ச் நாலைஞ்சு நாளைக்கு பிறகு நடத்தியிருக்கினம். அப்பிடி 'மட்ச்' திரும்ப வைக்கிறதெண்டால் அதுக்கும் இன்னொரு செலவு.

அதைவிட முதல்நாளே, வொலிபோல் சங்கம் சரியான ரண்டு ரெப்ரிமாரை அனுப்பி இருந்தால் அண்டைக்கே மட்சும் முடிஞ்சிருக்கும். இப்பிடி ஒண்டுக்கு ரண்டு தரம் மட்ச்சை நடத்தவேண்டிய அலைச்சலும் இல்லையே.

இனியாவது சங்கம் பொறுப்பா நடக்குமோ?



- பசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியாவின் 23ஆம் புலிகேசி!



லண்டன், ஜூலை 12

வடகொரிய அரசாங்கம் தினமும் ஏவுகணைச் சோதனை அறிவிப்புகளை வெளியிட்டு, உலகுக்குத் தன்னைக் "கெத்தாக" காட்டிக்கொள்ள முயன்றாலும், அந்த நாட்டு மக்களின் நிலைமை என்னமோ பரிதாப நிலைமைதான்.

அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்டிருக்கும் கடுமையான பொருளாதாரத் தடைகளால் அங்கு பெரும் பொருளாதார நெருக்கடி நிலவுகின்றது. அங்குள்ள உணவுப் பஞ்சத்தால் மக்கள் நாளாந்தம் இருவேளை உணவு உண்பதற்கே திண்டாடுகின்றனர் என்கின்றன சர்வதேசத் தகவல்கள்.

இந்தநிலையில், அந்த நாட்டு ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் உல்லாச வாழ்க்கை தொடர்பான தகவல்கள் சர்வதேச ஊடகங்களில் வெளிவந்திருக்கின்றன. நாடு நாசமாகப் போனால் போகட்டும், நான் ராஜாவாகத்தான் இருப்பேன் என்று கிம் பெரும் உல்லாச வாழ்க்கை வாழ்கின்றாராம். விலையுயர்ந்த மதுபானங்கள், சிகரெட்டுக்கள், இறைச்சி வகைகள் என இறக்குமதி செய்து அவர் பயன்படுத்துகின்றார் என்று கூறப்படுகின்றது.

கிம் அருந்தும் ஒரு போத்தல் மதுபானத்தின் விலை 7 ஆயிரம் டொலர் என்றும், மதுபானம் இறக்குமதி செய்ய அவர் ஆண்டுக்கு ஆண்டு 500 கோடி ரூபாவுக்கும் மேல் செலவிடுகிறார் என்றும் கூறப்படுகின்றது.

அதுபோதாதென்று அவர் விலையுயர்ந்த பிரேசிலியன் தேநீரைத்தான் அருந்துவாராம். அதற்காக ஆண்டுக்கு அவர் 16 கோடி ரூபாவுக்கு மேல் செலவிடுகிறாராம். அத்துடன் கிம் குடும்பத்துக்கு பிரத்தியேகமாக பீட்சா தயாரிப்பதற்காக 1997ஆம் ஆண்டுமுதல் இத்தாலியைச் சேர்ந்த சமையல்காரர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாராம்.

அத்துடன் கிம் தனக்குத் தேவையான மருந்துப் பொருள்களை அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளில் இருந்து இரகசியமாக இறக்குமதி செய்து பதுக்கி வைத்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

## கடலின் அடியில் அதிர்ந்தது நிலம்

நியூயோர்க், ஜூலை 12

வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் சக்திவாய்ந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆகப் பதிவாகியுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (எ-இ)

## இருபக்கமும் காவலர்கள் தக்காளிக்கு வந்த மவுசு!

புதுடில்லி, ஜூலை 12

இந்தியா முழுவதும் தற்போது தக்காளியின் விலை சடுதியாக அதிகரித்து வருகின்றது. இந்தியர்களின் உணவில் தக்காளி இன்றியமையாத ஒன்றாகக் காணப்படும் நிலையில், தக்காளி விலை உயர்வு மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்தநிலையில், இந்தியப் பிரதமர் மோடியின் சொந்த மாநிலமான வாரணாசியில் ஒரு சுவாரசியமான சம்பவம் நடந்துள்ளது. அங்குள்ள தக்காளி வர்த்தகர் ஒருவர் தனது கடையில் தக்காளிகளைப் பாதுகாப்பதற்காக இரு பாதுகாவலர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளார்.

தக்காளி வாங்க வருவோர், தக்காளியின் விலையைக் கேட்டுக் கடுப்பாகிச் சண்டைக்கு வருவதாலேயே, தொழில்முறை பாதுகாப்பாளர்களை கடையில் நிறுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது என்று அந்த வர்த்தகர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## பெண்ணல்ல பெண்ணல்ல 'லிசா' பலரின் வேலைக்கு இனி 'ஆப்பா?'

புதுடில்லி, ஜூலை 12

தற்போது கணினி உலகில் அதிகம் பேசப்படும் விடயம் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம். இந்தத் தொழில் நுட்பத்தால் பல செயற்பாடுகள் இலகுவாக்கப்படும் என்று கூறப்படுகின்றபோதும், இந்தச் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பலரின் வாழ்க்கையில் விளையாடி விடும் என்றே தெரிகின்றது.

இந்தத் தொழில்நுட்பம் ஏற்கனவே டிசைனர்கள் போன்ற பலரின் வேலைகளுக்கு உலை வைத்திருக்கும் நிலையில், தற்போது செய்தி வாசிப்பாளர்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் போன்றோருக்கும் ஆபத்தாக மாறியிருக்கின்றது. இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் ஓரிவி என்ற தனியார் தொலைக்காட்சி செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் லிசா என்ற மெய்நிகர் செய்தி வாசிப்பாளரை அறிமுகப்படுத்தியுள்ளது. அச்சு அசலாக இளம் பெண் போன்று இருக்கும் லிசா, ஆங்கிலம், ஒடிசா மொழிகளில் செய்தி வாசிக்கும் திறனுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

லிசாவை அறிமுகப்படுத்தும் நிகழ்வு ஒடிசாவின் தலைநகர் புவனேஸ்வரில் நடைபெற்றது. அதில் லிசா செய்தி வாசித்து அனைவரையும் அசத்தியுள்ளது.

ஆக இனிமேல் பலரின் வேலைகளுக்கு செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் ஆப்பு வைக்கும் என்று நம்பலாம். (எ-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**மிதுனம்:** ஆதரவு உற்சாகம் தரும். திடீர் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். அந்நியோன்யம் அதிகரிக்கும். செலவுகள் ஏற்படக்கூடும். சுபச்செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். நண்பர்களின் சந்திப்பும், அவர்கள் மூலம் எதிர்பாராத ஆதாயமும் உண்டாகும். புதிய முயற்சிகளைக் காலையிலேயே தொடங்குவது நல்லது.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். கடன் வாங்குவதைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்து விடும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சங்கடங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் உங்கள் யோசனையை வாழ்க்கைத் துணை ஏற்றுக் கொள்வார். சிலருக்கு எதிர்பாராத திடீர் செலவு ஏற்படும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். ஆதாயம் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயல்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். ஆதாயம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## விபத்துகள் தொடர்கதையா?

சில நாள்களுக்கு முன்னர் மன்னம்பிட்டி, கொட்டலிய பாலத்துக்கு அருகே ஆற்றில் கவிழ்ந்து தனியார் பயணிகள் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 11 பேரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த விபத்துக்கு கட்டுப்பாடற்ற வேகமே காரணம் என்று பொதுவாகக் கூறப்படுகின்றபோதும், அதைத் தாண்டி கேள்விக்குட்படுத்தப்பட வேண்டிய பல்வேறு விடயங்கள் இந்த விபத்துக்குள் புதைந்திருக்கின்றன. உண்மையில் அரசாங்க அதிகாரிகளினதும், பொலிஸாரினதும் அசமந்தப் போக்கே இவ்வாறான விபத்துகளுக்கு முதற்காரணமாக இருக்கின்றது என்பதே மறுக்க முடியாத உண்மை.

விபத்துக்குள்ளான பஸ்ஸின் ஆபத்தான வேகம் தொடர்பாக அதில் பயணித்த ஒருவர் மூன்றாண்டுக்கு முன்னதாகவே – பொதுவெளியில் – சமூகவலைத்தளம் மூலம் – எச்சரித்திருக்கின்றார். அதைக் கட்டுப்படுத்தத் தவறும் பட்சத்தில் உயிரிழப்புகளைச் சந்திக்க நேரிடும் என்றும் அவர் அபாய எச்சரிக்கை விடுத்தும் கூட, அது எவராலும் கருத்திற்கொள்ளப்படவில்லை. அதன்விளைவு இன்று 11 குடும்பங்கள் கதறியழும் நிலைமையை உருவாக்கியிருக்கின்றது. அதுமட்டுமன்றி பயணிகள் சேவையில் ஈடுபடும் இந்த பஸ் உரிய அனுமதிப்பத்திரம் இன்றியே இதுவரைகாலமும் சேவையில் ஈடுபட்டிருக்கின்றது. நாலைந்து வருடங்களாக ஒரு பஸ் உரிய அனுமதிப்பத்திரமின்றி பொதுப்போக்குவரத்தில் ஈடுபடுவதென்பது எவ்வளவு ஆபத்தானது? அனுமதிப்பத்திரமற்ற இந்த பஸ்ஸை பொலிஸார் ஒருதடவை கூட பரிசோதனைக்கு உட்படுத்தவில்லையா? கொடுக்கவேண்டியதைப் பொலிஸாருக்கும் அதிகாரிகளுக்கும் கொடுத்ததாலேயே இவ்வாறு அந்த பஸ் அனுமதியில்லாமல் காட்டுத்தனமாக எங்கும் ஓடித்திரிய முடிந்துள்ளது. உண்மை இவ்வாறிருக்கையில் விபத்துக்குக் காரணம் அதிக வேகமே, சாரதியின் கவனயீனமே என்று அரசாங்கமும், பொலிஸாரும் சாட்டுகளை அடுக்கி தப்பி விடமுடியாது. இவ்வாறான விபத்துகளுக்கு அரசாங்க அதிகாரிகளின் அசண்டையீனமும், சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பொலிஸார் சலுகைகளுக்காகவும், கையூட்டுகளுக்காகவும் கண்ணை மூடி இருப்பதுமே முக்கியமான காரணம். விபத்தில் சிக்கிய இந்த பஸ் தொடர்பில் முன்னரேயே அதிகாரிகளும், பொலிஸாரும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றியிருந்தால், இந்த அநியாய உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்காதே.

விபத்துக்குள்ளான பஸ் சென்றுவந்த, பயண மார்க்கத்தில் உள்ள பாலங்களைச் சீரமைப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று துறைசார்ந்த இராஜாங்க அமைச்சர் கூறுகின்றார், கிழக்கு மாகாண ஆளுநர் விபத்துத் தொடர்பில் அறிக்கை கோருகின்றார். இன்னும் பல அறிவிப்புகள் வெளியாகின்றன. ஆனால் விபத்து ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்பட்ட பின்னர் அறிக்கை கோருவதாலும், விசாரணைகள் மேற்கொள்வதாலும் எதுவும் மாறிவிடப் போவதுமில்லை; பறிக்கப்பட்ட உயிர்கள் மீள வந்துவிடப் போவதுமில்லை. வெறுமனே பஸ் சாரதியை நோக்கி அனைவரும் விரலை நீட்டுவதுடன் நின்றுவிடாது, இந்தப் பஸ் பயணிகள் சேவையில் ஈடுபட அனுமதித்த அனைத்துத் தரப்புகளும் தண்டிக்கப்பட வேண்டும். அவ்வாறு நடந்தாலே அநியாய உயிரிழப்புகளைத் தவிர்க்கமுடியும்.

கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல, வடக்கு மாகாணத்திலும் இப்போது இந்தநிலைமை தான் பயணிகள் சேவையில் ஈடுபடும் பெரும்பாலான பஸ்கள் உரிய அனுமதிகளைக் கொண்டிருப்பதில்லை என்பதும், வீதிகளில் பஸ்களை மறிக்கும் பொலிஸார் கவனிக்கப்படுவதால் அவர்களும் இவ்வாறான பஸ்களைக் கண்டும் காணாதது போன்று இருந்து விடுகின்றனர் என்பதும் பரவலான குற்றச்சாட்டு. அதேநேரம் அதிவேகப் பயணங்களை மேற்கொள்ளும் பயணிகள் பஸ்கள் மீதோ, போட்டியிட்டுப் பயணிக்கும் பஸ்கள் மீதோ, அளவுக்கதிகமான பயணிகளை அடைந்தபடி சாகசம் காட்டும் பஸ்கள் மீதோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலைமையே இப்போதும் இருக்கின்றது. உயிர்ப்பலிகள் நடக்கும் முன்னர் இவை கவனத்தில் கொள்ளப்பட்டுக் களையப்பட வேண்டும். இல்லையேல் இங்கும் மன்னம்பிட்டியவைப் போன்ற அநியாயப் பலியெடுப்புகள் தொடர்கதையாகிவிடக்கூடும்.

### நாளொரு நல்வார்த்தை

"குற்றம் புரிந்தவனும் தனக்கு நியாயம் கேட்கிறான். குற்றத்துக்கு ஆட்பட்டவனும் தனக்கு நியாயம் கேட்கிறான். யாருக்கு அதை வழங்குவது என்பதை பணம் முடிவு செய்கிறது"
– கண்ணதாசன்




# மனிதப்புதைகுழி விடயத்தில் ஐ.நா. தலையீடு உடன் தேவை

## நாடு கடந்த அரசாங்கம் அவசர கடிதம்

**கொழும்பு, ஜூலை 12**

**முல்லைத்தீவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பெரும் மனிதப் புதைகுழி உள்ள பகுதிக்கு நேரடியாகச் செல்லவேண்டும் என்றும், அந்த இடத்தைக் கையகப்படுத்தி விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சிறப்பு விசாரணை ஆணையாளர் ஆகியோருக்கு நாடு கடந்த தமிழீழ அரசு கடிதம் அனுப்பியுள்ளது.**

33ஆவது மனிதப்புதைகுழியான இந்தப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ள இடம் போரின்போது சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. இந்தப் புதைகுழிக்கு அருகே பெரும் இராணுவ முகாம் ஒன்று இருந்தது என்றும் கூறப்படுகின்றது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களே மனிதப் புதைகுழியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று தமிழ் மக்கள் அஞ்சுகின்றனர்.

தங்களின் அலுவலகத் தலையீடு இன்றி உண்மை எப்போதும் வெளிவராது என்ற மேலதிக அச்சமும் தமிழ் மக்களிடையே உள்ளது. உங்கள் அலுவலகத்தின் தொழில் நிபுணத்துவமும், மனித உரிமைகளுக்கும் மதிப்பளிப்பதும் இந்த விடயத்தில் உடனடியாகத் தேவை.

நீதித்துறை உள்ளடங்கலாக சிறிலங்காவின் அரச கட்டுமானங்களில் பரவலாக வேரூன்றியுள்ள இனவாதம் காரணமாகத் தமிழ் மக்கள் ஒருபோதும் நீதியை உள்ளூர்ப் பொறிமுறை மூலம் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். அந்தவகையில் உடனடியாக அகழ்வுக்கான சர்வதேசப் பொறிமுறை ஒன்று சாட்சியங்களைப் பாதுகாக்கவும், நீதியையும், பொறுப்புக்கூறலையும் நடைமுறைப்படுத்துவது அவசியம் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-இ)

# 15 நிதி நிறுவனங்களின் பணப்பரிமாற்றம் ரத்து

## மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

நாணய மாற்று உரிமத்தின் நிபந்தனைக்கு இணங்காத 15 நிறுவனங்கள் இனி பணப் பரிமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டாது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான நாணய மாற்று உரிமத்தின் நிபந்தனைக்கு இணங்காத காரணத்தால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கடந்த பெப்ரவரி மாதமே அந்த நாணய மாற்றுநர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த 15 நிறுவனங்கள் இனி பணப்பரிமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.

இந்த நிறுவனங்களுடன், வெளிநாட்டு நாணயங்களை கொள்வனவு செய்தல், விற்றல் மற்றும் பரிமாற்றம் செய்வதானது அந்நியச் செலாவணிச் சட்டத்தை மீறுவதாகக் கருதப்படும் என்றும் பொது மக்களுக்கு மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ச-இ)

**நாளை** 13.07.2023 வியாழக்கிழமை ஆனி 28


சுபநேரம் : 07.29 - 08.59
ராகுகாலம் : 01.29 - 02.59

ஏகாதசி விரதம், கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஆணை எமக்கே உள்ளது

## 13ஐ மட்டும் கோர முடியாது என்று சம்பந்தன் திட்டவட்டம்



தமிழ் மக்களின் ஆணை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குத் தான் உள்ளது. அதனை நாம் மீற முடியாது. 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு மட்டும் நாம் இந்தியாவிடம் கோரமுடியாது - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கும், இரா.சம்பந்தனுக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின்போதே சம்பந்தன் இவ்வாறு குறிப்பிட்டதாக எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

'தமிழ் மக்களின் ஆணை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு மாத்திரமே உள்ளது. நாம் மக்கள் ஆணையை மீறிச் செயற்பட முடியாது. 13ஆவது திருத்தச் சட்டத்தை மாத்திரம் முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவை கோரமுடியாது. தமிழ் மக்கள் அதற்கு ஆணை தரவில்லை. இந்தியாவே அதனைத் தாண்டி கூட்டுறவு சமஷ்டி தொடர்பில் பிரஸ்தாபித்துள்ளது. இவ்வாறிருக்கையில் 13ஆவது திருத்தத்தை மாத்திரம் முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்று மக்கள் ஆணையுள்ள நாம் கோரமுடியாது. ஏனைய கட்சிகள் எவ்வாறு வேண்டுமானாலும் செயற்படலாம். மக்கள் ஆணையுள்ள நாம் அவ்வாறு செயற்படமுடியாது' எனத் திட்டவட்டமாக இரா.சம்பந்தன் குறிப்பிட்டார் என சுமந்திரன் தெரிவித்தார். (ஓ-5)


**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 85 ரூபாய்

**077 334 1281**

**தேவை**

5 அடி Cooler வாகனம் மற்றும் 150L - 1000L கொள்ளளவு உடைய Defreezer தேவை.

தொடர்பு : 077 550 0444

**வேலையாள் தேவை**

கோண்டாவிலில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பெண் சமையலாளர் தேவை. கடமை நேரம் காலை: 7.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 119 0267**


### நாரந்தனை சைவ மகாசபையின்
### வருடாந்த பொதுக்கூட்டம்
**(தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்)**

**16.07.2023**

அம்பிகை அடியார்களே !

நிகழும் சோபகிருது வருடம் ஆனி மாதம் 31 ஆம் நாள் (16.07.2023) ஞாயிற்றுக்கிழமை பகல் 09.30 மணியளவில் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மணி மண்டபத்தில் சபைத் தலைவர் திரு.வே.துரைராசா அவர்களின் தலைமையின் கீழ் மேற்படி கூட்டம் நடைபெற அம்பிகையின் அருள் கூடியுள்ளது.

அத்தருணம் சபை அங்கத்தவர்கள், அம்பிகை அடியார்கள், நலன்விரும்பிகள், யாவரும் வருகை தந்து பங்குபற்றுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**நிகழ்ச்சி நிரல்**

1. தேவாரம்
2. தலைமையுரை
3. சென்ற பொதுக்கூட்ட அறிக்கை
4. செயற்பாட்டு அறிக்கை
5. கணக்காய்வு அறிக்கை
6. கோபுரத்திருப்பணிச் சபை தொடர்பானது
7. புதிய நிர்வாகத் தெரிவு
8. நித்திய பூசகர் தொடர்பான விடயம்
9. திருவிழா தொடர்பான விடயம்
10. பிறவிடயம் - குத்தகை
11. நன்றியுரை
12. தேவாரம்

**குறிப்பு :** பிரேரணைகள் இருப்பின் செயலாளர் அவர்களுக்கு எழுத்துமூலம் 15.07.2023 சனிக்கிழமை 5.00 மணிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

**சைவ மகா சபை**
**நாரந்தனை**

**திரு.சி.தனபாலன்**
**செயலாளர்**

(CS 25509) A-1

# இளைஞனை மறித்து உடுவிலில் வழிப்பறி!

யாழ்ப்பாணம், உடுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வீதியால் பயணித்த இளைஞர் ஒருவரை வழிமறித்து பணம் மற்றும் அலைபேசி என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இரண்டு இலட்சம் ரூபா பணத்துடன், மானிப்பாய் - உடுவில் வீதியில் பயணித்துள்ளார். இந்த நிலையில், உடுவில் பகுதியில் ஒரு மோட்டார்சைக்கிளில் வந்த மூவரடங்கிய குழு அந்த இளைஞரை வழிமறித்து அவரிடம் இருந்த இரண்டு இலட்சம் ரூபா பணத்தையும் அலைபேசியையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது. அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபராக இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-125)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




கொழும்பு, பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் கடந்த **08.07.2023** அன்று நடைபெற்ற சமூக சேவைக்கான தேசிய விருது வழங்கும் நிகழ்வில் பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

கலாநிதி

**இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் சமூக சேவையினைப் பாராட்டி மக்கள் பாதுகாப்பிற்கான மனித உரிமைகள் அமைப்பினால்

**"சாமஸ்ரீ தேசபந்து"**

என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையை பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**

உரிமையாளரும், ஊழியர்களும்

**சிறி மீனாட்சி நகை அகம்**

**183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(cs 17238) (N.1)


# பெறுகை அறிவித்தல்
### வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) - 2023

01. குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்ட கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020 (i) ஆம் இலக்க 11.01.2021 ஆம் திகதிய 04/2016 (ii) ஆம் இலக்க 08.05.2019 ஆம் திகதிய 04/2016 (iii) ஆம் இலக்க 18.02.2021 ஆம் திகதிய மற்றும் 04/2016 (iv) ஆம் இலக்க 09.02.2023 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தைச் சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமானதரத்தில், நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

06. கேள்விகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதி சேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்விதாரர் மாத்திரமே வரிக் கொடுப்பனவைக் கோர முடியும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144. தொலைநகல் : 0212250144. மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணி வரையிலான காலப் பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

08. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை.சுழிபுரம் என்னும் இடத்தில் 12.07.2023 ஆம் திகதியிலிருந்து 26.07.2023 ஆம் திகதி வரை சனி ஞாயிறு தவிர்ந்த வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000 (வரிநீங்கலாக) இனை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

09. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை. சுழிபுரம் என்னும் முகவரிக்கு 27.07.2023 ஆம் திகதி பி.ப 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்றகேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

10. கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (VAT நீங்கலாக) (Mn) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப் படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | அம்மன் வீதி, சுழிபுரம் புனரமைப்பு NP/14/41(17)/02/ PSDG/01/2023 | 1.94 Mn | 60 நாட்கள் | C9,C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 14.09.2023 | 19,500.00 | 12.10.2023 |

கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 17.07.2023 அன்று பி.ப.14.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**
**12.07.2023**

(CR 37239) AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய பொலிஸ்மா அதிபர் இழுபறி தேசியப் பாதுகாப்புக்குப் பேராபத்து!

## ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 12**

**புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் அரசாங்கத்துக்குள் நிலவும் இழுபறி நிலை காரணமாக தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உருவாகியுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது கொலை, துஷ்பிரயோகங்கள், போதைப் பொருள் பாவனை போன்ற சட்டவிரோதச் செயல்கள் பெருகிவிட்டன. அதனைக் கட்டுப்படுத்த திறமையான பொலிஸ் சேவை தேவை.

பொலிஸ்மா அதிபர் ஓய்வு பெறும்போது புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியாத அவலநிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபராக சி.டி.விக்கிரமரத்னவுக்கு சேவை நீடிப்பு என்பது சட்டவிரோதமானது. பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் அரசாங்கத்துக்குள் நிலவும் இழுபறி நிலை காரணமாகத் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எனவே புதிய பொலிஸ்மா அதிபர் நியமனத்திலுள்ள இழுபறி நிலை குறித்து அரசமைப்புப் பேரவை கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ச-இ)

## விபத்தில் தந்தை, மகன் உயிரிழப்பு

அநுராதபுரம், ஜூலை 12

ஹைஏஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் தந்தையும் மகனும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அநுராதபுரம் - கெப்பிட்டிக்கொல்லாவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது. விபத்தில் 47 வயதான தந்தையும் 17 வயதான மகனுமே உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை மற்றும் மகனை எதிர்த் திசையில் வந்த ஹைஏஸ் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

ஹைஏஸ் சாரதியைக் கைது செய்த பொலிஸார் விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-ரி2,22)

## இந்திய யாத்திரிகர்களுக்கு 'முருகன் பாதை' பொதி!

### சுற்றுலா அதிகாரசபையால் அறிமுகம்

கொழும்பு, ஜூலை 12

'முருகன் பாதை' எனும் பெயரில் சுற்றுலாப் பொதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுற்றுலா அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்தப் பொதியில் நல்லூர், கதிர்காமம், திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் உட்பட 10 இந்து ஆலயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலிருந்து வரும் யாத்திரிகர்களின் நன்மைகருதி இந்தப் பொதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என சுற்றுலா அதிகாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-ரி2 6)

## முற்கூட்டிய பிரசவத்துக்காக மருந்து அருந்திய பெண் சாவு

கொழும்பு, ஜூலை 12



குழந்தைப்பேறு விரைவாகக் கிடைப்பதற்காக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மருந்தை உட்கொண்ட பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் என மின்னேரியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் சிகிரியாவில் நடந்துள்ளது. 23 வயதுடைய திருமணமான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்தப் பெண்ணுக்கு திருமணமாகி 3 வருடங்கள் குழந்தையில்லாத நிலையில் பிரசவத்தை விரைவுபடுத்த தனது உறவினர் நடத்தும் ஆலயம் ஒன்றுக்குச் சென்று அங்கு பரிந்துரைக்கப்பட்ட உள்ளூர் மருந்தை மூன்று நாள்கள் உட்கொண்டுள்ளார்.

பின்னர் உடல்நலக்குறைவு ஏற்படவே மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## அச்சுவேலி மத்திய கல்லூரி மண்டபத்துக்கு அடிக்கல்

அச்சுவேலி, ஜூலை 12

அச்சுவேலி மத்திய கல்லூரியின் பொது மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவன் மருத்துவ கலாநிதி ஆர்.புண்ணியமூர்த்தி, தனது தந்தையின் ஞாபகார்த்தமாக 70 மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்பில் இந்த பொதுமண்டபத்தை அமைத்து கையளிக்கவுள்ளார். (ச-ரி2)

## 'ஜீன்ஸ்' திருடியவருக்கு கடூழியச் சிறை



ஆறு வருடங்களுக்கு முன்னர் கொழும்பு கறுவாத் தோட்டப் பகுதியிலுள்ள ஆடை விற்பனையகத்தில் இரண்டு நீளக் காற்சட்டைகளை திருடியவருக்கு கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த சந்தேகநபர் கடந்த 2017ஆம் ஆண்டு ஆடை விற்பனையகத்தில் இரண்டு நீளக்காற்சட்டைகளை திருடினாரென கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். அந்த நீளக்காற்சட்டைகளின் பெறுமதி சுமார் 20 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் சுமார் 6 வருடங்களாக இந்த வழக்கை விசாரித்த கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு மீள எடுத்தது. அதன்போது சந்தேகநபருக்கு கடூழியச் சிறைத்தண்டனை விதித்து நீதிவான் தீர்ப்பளித்துள்ளார். (ச-இ)

## விலை உயர்வு தொடர்பாக மூடப்படும் மரக்கறிக் கடை

கொழும்பு, ஜூலை 12



நாட்டில் மரக்கறிகளின் விலைஉயர்வு காரணமாக 75 சதவீதமான சிறியளவிலான சில்லறை மரக்கறி விற்பனை கடைகள் மூடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதங்களில் பெரும்பாலான மரக்கறிகளின் விலை 100 சதவீதத்தால் அதிகரித்ததால் மரக்கறிகளின் தேவை குறைந்துள்ளது; என்று மொத்த வியாபாரிகள் கூறினர்.

மரக்கறிகளின் விலை உயர்வால் பல நுகர்வோர் 100 முதல் 250 கிராம் வரை மரக்கறிகளை வாங்குகின்றனர் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

காய்கறிகள் விற்பனை செய்யப்படாததால் பழுதடையும் மரக்கறிகளை தினமும் அகற்ற வேண்டியுள்ளது என்றும், சில்லறை மரக்கறி வியாபாரிகள் கடைகளை மூடியுள்ளனர் என்றும் மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, சில்லறை மரக்கறி வியாபாரம் தடைப்பட்டுள்ளதால் பொருளாதார நிலையங்களுக்கு வரும் மொத்த வியாபாரிகளின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்துள்ளது என்று பொருளாதார நிலையங்களின் அதிகாரிகள் கூறுகின்றனர். (எ-இ)

## ராஜபக்சக்களின் ஆட்சியை நிச்சயம் தோற்றுவிப்போம்!

### இந்திக அனுருத்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

போரை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சுதந்திரத்தை உறுதிப்படுத்திய ராஜபக்சக்கள் தலைமையிலான அரசாங்கத்தை நிச்சயம் மீண்டும் தோற்றுவிப்போம் என இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.

கந்தானைப் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

கட்சி என்ற ரீதியில் கடந்த ஆண்டு பெரும் நெருக்கடிகளை நாம் எதிர்கொண்டோம்.

மக்களாணையுடன் ஆட்சிக்கு வர முடியாத மக்கள் விடுதலை முன்னணி போராட்டத்தின் ஊடாக ஆட்சியமைக்க இளையோரைத் தவறாக வழிநடத்தியது.

பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்தபோது அரசாங்கத்தை பொறுப்பேற்காமல் தப்பிச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணியினர் தற்போது அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கின்றனர்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீட்சியடைந்ததன் பின்னர் அரசியல் குறித்து அவதானம் செலுத்துவோம். எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் ராஜபக்சக்கள் தலைமையிலான அரசாங்கத்தைக் கொண்டுவருவோம் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

எமது குடும்பத்தின் குலவிளக்காக திகழ்ந்து
அணைந்த எமது அன்புத் தெய்வம்

அமரர்

## மாணிக்கம் இந்திரகுமார்

(ஓய்வுபெற்ற இலங்கை போக்குவரத்து சபை உத்தியோகத்தர்)

மண்ணில் 09.09.1955

விண்ணில் 13.06.2023

திதி:- வைகாசி மாத தேய்பிறை தசமி

**அவர்களின்**

சிவபதம் எய்திய செய்தி கேட்டு எமக்குப் பலவழிகளில் தோளோடு தோள் நின்று எங்களின் குடும்பத்தில் ஒன்றி அவரின் கடமைகளைச் சிறப்பாக செய்ய உதவியவர்களுக்கும், ஆறுதல் கூறி ஆகாரம் அளித்தவர்களுக்கும், தொலைபேசி வாயிலாகவும், சமூகவலைத்தளம் ஊடாகவும் ஆறுதல் வார்த்தைகளைப் பகிர்ந்தவர்களுக்கும், இரங்கல் செய்தி அனுப்பியவர்களுக்கும், பல்வேறு வழிகளில் எமது குலவிளக்கிற்கு மருத்துவரீதியில் உதவி செய்த வைத்தியர்களுக்கும், மருத்துவமனை ஊழியர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வழங்கி துயர் பகிர்ந்த உள்ளங்களுக்கும் இறுதிக்கிரியையில் பல சேவைகள் வழங்கிய உறவினர், நண்பர்களுக்கும், ஊர் மக்களுக்கும் அத்துடன் அந்தியேட்டி மற்றும் வீட்டுக்கிரியைகளில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(247722)AH-1

குடும்பத்தினர்.


# பிக்குகளை அவமானப்படுத்த புலம்பெயர் சமூகம் திட்டமாம்

## ஆனந்த சாகர தேரர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 12**
**பௌத்த மதருமாரின் கண்ணியத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தத் திட்டமிட்ட முயற்சிகள் இடம்பெறுகின்றன. அதற்கு புலம்பெயர் சமூகம் நிதி வழங்குகின்றது என பகியங்கல ஆனந்த சாகர தேரர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
சர்வதேச உள்நாட்டுச் சூழ்நிலைகள் வீழ்ச்சியுறுகின்ற நிலையில் பௌத்தமதகுருமாரும் பலவீனமடைந்துள்ளனர். அவர்கள் குற்றச் செயல்களுக்கு பலிக்கடாவாகின்றனர். இந்த நாட்டின் பௌத்தமதகுருமாரும் மக்களும் சரியான பாதையைப் பின்பற்றவேண்டும்.
சிவில் சமூகத்தின் மத்தியில் பௌத்தமதகுருமாரின் கௌரவத்தை- அதிகாரத்தைக் குறைப்பதற்காக நன்கு திட்டமிட்டுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. புலம்பெயர்ந்தோர் மத்தியிலிருந்து பெருமளவு பணம் இதற்குக் கிடைக்கின்றது. இதற்கு அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறித்து நாங்கள் வெட்கமடைகின்றோம்- என்றார். (ச-இ)

# மாணவர்களுக்கு மீள 'சுராக்ஷா' காப்புறுதி

## கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூலை 12
பாடசாலை மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட 'சுராக்ஷா ' காப்புறுதித் திட்டம் எதிர்வரும் ஆண்டு மீண்டும் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.
'நிலையான நாட்டுக்கான கூட்டுப் பாதை' எனும் தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தக் காப்புறுதித் திட்டம் கடந்த ஆட்சியின்போது இடைநிறுத்தப்பட்டது.
தற்போது நாட்டின் கல்வி முறையில் மாற்றம் கொண்டு வரப்படுகிறது. அதற்கமைய ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய அடுத்த ஆண்டு முதல் காப்புறுதித் திட்டம் மீள அறிமுகப்படுத்தப்படும் -என்றார். (ச-ரி2)

# வேகத்துடன் பயணித்த யுவதிகள் கைது

கொழும்பு, ஜூலை 12
பொலிஸாரின் சமிக்ஞையை மீறி வாகனத்தை ஆபத்தான முறையில் செலுத்திய குற்றத்துக்காக யுவதிகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.
மருதானைப் பகுதியில் யுவதிகள் அதிக வேகத்துடன் வாகனத்தைச் செலுத்திச் சென்றுள்ளனர். தடுத்து நிறுத்திய பொலிஸாருடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டுள்ளனர். அதையடுத்து மூவரும் கைது செய்யப்பட்டனர். (எ-ரி3)



# சாரதிகளின் கவனயீனம் விபத்துகளுக்குக் காரணம்

## பொலிஸார் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 12
சாரதிகளின் கவனயீனத்தாலேயே நாட்டில் அதிகளவான வாகன விபத்துகள் பதிவாகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 126 வாகன விபத்துகள் நிகழ்ந்துள்ளன. இந்த விபத்துகளில் இதுவரை ஆயிரத்து 190 பேர் உயிரிழந்துள்ளனர்.
சாரதிகளின் கவனயீனத்தாலேயே அதிகளவான வாகன விபத்துகள் பதிவாகிவருகின்றன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார். (ச-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை

"மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைடந்துகண் ணோடா தவர்." - வள்ளுவர்





# சிதையும் நிலையில் தமிழர் ஆதாரங்கள்!

■ ஆர்.கே.மேனன்

## துடிப்பாருமில்லை: தடுப்பாருமில்லை

சிதைகின்றது யமுனாஏரி, மகிமை இழக்கின்றது மந்திரிமனை, தூர்ந்து போகின்றது கந்தோரண வாயில், துடிப்பாரும் இல்லை. அதைத் தடுப்பாருமில்லை. சிந்தித்துச் செயற்படவேண்டிய இன்றைய கட்டாய தேவைகளுள் இது மிக முக்கியமானது. பொறுப்புடனும் தூரநோக்குடனும் சிந்திக்கும்போது இதன் முக்கியத்துவம் ஒவ்வொருவருக்கும் புரியும். ஈழத்து வரலாற்றில் பலவற்றை நாம் இழந்துவிட்டோம். மீண்டும் மீண்டும் அதே தவறுகளைத்தான் விடுகின்றோம். வேற்று இனத்தவர்கள் இல்லாத வரலாறுகளையெல்லாம் இருப்பதுபோல் காட்டும் இவ்வேளையில் நாம் இருக்கின்ற வரலாறுகளைக்கூட தொலைத்து வருகின்றோம். இது வேதனைக்குரிய விடயமாகும். சிந்தித்துச் செயற்படமுன் சிதைந்து விடும் நிலையில் நல்லூர் இராசதானியின் சுற்றுப்புறத்தில் உள்ள வரலாற்று ஆதாரங்கள் தூர்ந்து வருகின்றன. அதை தக்கவைப்பதற்கும் மீட்பதற்கும் உரித்தான முயற்சிகள் மிகத்துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

சட்டநாதர் கோவிலுக்கு அருகில் உள்ள மந்திரிமனை எக்காலத்துக்கு உரியது எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாவிட்டாலும் இக்காலத்தில் அது தூர்ந்து போகும் என்பதை உறுதிபடக்கூற முடியும். ஆடு, மாடுகளை கட்டி வைத்துப் பராமரிக்கும் இடமாகவும் சமூகப் பிரச்சினைகளின் துஷ்பிரயோகக் களங்களாகவும் அது மாறிவருகின்றது. கூரைக்குக் கீழ் போடப்பட்டிருந்த குறுக்கு மரங்கள் களவாடப்பட்டுள்ளன. செல்லரித்த புற்றுக்களும் புல் பூண்டுகளுமாக எமது வரலாற்று ஆதாரங்கள் இருப்பது எவர்க்கும் வேதனையினைத் தரவில்லையா? இதை மீட்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், அது சுற்றுலாவை மையப்படுத்திய கேந்திரப் பகுதியாக மாற்றப்படுவதற்குரிய முயற்சிகள் இன்னும் ஆழமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே உண்மை.

யமுனா ஏரியின் மலையோரம் அடுக்கப்பட்ட கற்களின் அடிப்பாகம் தூர்ந்து வருகின்றது. விரைவில் மேற்பகுதி பாறிவிழுவதற்கு வாய்ப்பு அதிகம் உள்ளது. அயல் மக்களின் அன்றாடச் செயற்பாட்டினால் நாளுக்கு நாள் இந்த ஏரி இடிந்து வருகின்றது. உடனடியாகப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கவில்லையானால் தமிழ் மன்னர்கள் ஆண்டமைக்கான அடையாளங்களை நாம் இழக்க வேண்டி வரும்.

## வரலாற்றுப் பெருமைகள்

ஒன்றின் பெருமைகள் புரிகின்ற போதுதான் அதன் அருமைகள் தெரியவரும். அந்த வகையில் யமுனாஏரி பல வரலாற்றுப் பெருமைகளைக் கொண்ட ஓர் பகர வடிவ ஏரியாகும். இவ் ஏரிக்குள் ஒரு சுரங்கப்பாதை உண்டு என்றும் அது அரண்மனையின் அந்தப்புறத்துக்குச் செல்வதால் மன்னர்களின் மனைவிமார் நீராடுவதற்குக் கட்டப்பட்டு இருக்கலாம் என்றும் வரலாறுகள் கூறுகின்றன. இந்தியாவின் யமுனாநதியில் இருந்து கொண்டுவந்த புனித நீர் இதனுடன் கலக்கப்பட்டமையால் யமுனாஏரி எனும் பெயர் வரக்காரணமாயிற்று. இது ஒருபுறமிருக்க மறைந்த பேராசிரியர் சிவத்தம்பி கூறும்போது, 'மன்னர்களின் முரசொலியைக் கொண்டுதான் அன்று அவர்களின் பெருமை தீர்மானிக்கப்பட்டது. நீண்ட தூரம் கேட்கக்கூடிய ஒலிச்சத்தத்தைப்பெற முரசுக்குப் பயன்படும் மிருகத் தோல் செப்பனாகப் பதனிடப்பட வேண்டும். அதனைப் பதனிடுவதற்காகவே இந்த ஏரி கட்டப்பட்டிருக்கலாம் என்று கூறுகின்றார். அதாவது இவ் ஏரியின் பகர வடிவின் நடுவில் ஓர் மேடை உள்ளது. அம் மேடையில் தோல் விரித்துப் பதனிடப்படும் என்கிறார். அதாவது வெய்யிலில் அது உலர்ந்து ஈர நீராவியால் அது இழகி, மீண்டும் உலர்ந்து மீண்டும் இழகி என மாறிமாறி இடம்பெறும் செயலால் தோல் செப்பனாகப் பதனிடப்படும் எனவும் இவர் விபரிக்கிறார். இதன்மூலம் முரசொலி நீண்டதூரம் ஒலிக்கும் என்கிறார். இவ்வாறான பல பெருமைகளைக் கொண்ட இந்த ஆதாரங்கள் சிதைவுறுதல் என்பது எவ்வாறு ஏற்புடையது என்பதே இக்கட்டுரையின் ஆதங்கமாகும்.



## அச்சுறுத்தும் அரசியல்

அன்றில் இருந்து இன்றுவரை இலங்கைத் தமிழர்கள் சிறுபான்மை எனும் சிறைக்குள் சிக்கித் தவிக்கும் பக்கங்கள் பல. இவ்வாறு நிலைமை இருக்கும் போது அடையாளங்களைக்கூட நாம் அலட்சியப்படுத்துவது எந்தவகையிலும் நியாயமல்ல. இலங்கைத் தமிழர்கள் வந்தேறுகுடிகள் என்று நியாயப்படுத்தும் அநியாயங்கள் பல அரங்கேறுகின்றன. தமிழ் மன்னர் ஆட்சிக்கான அடையாளங்களையும் நாம் தொலைத்துவிட்டோமானால் இனவாதத் திட்டங்களுக்கு இணைந்து செல்ல வேண்டிய நிலைதான் உருவாகும். இது தொடர்பாக தமிழர் சிந்தித்துச் செயற்பட வேண்டிய இக்கட்டான சூழல் இது.

எம்மவர் மத்தியில் காணப்படும் பெரும் பலவீனம் சுயநலத்துக்கப்பால் பொதுநலச் சிந்தனையை இழந்து வாழ்வதேயாகும். இதனால்தான் ஈழத்து இலக்கிய வரலாற்றில்கூட பல பக்கங்களை நாம் தொலைத்துவிட்டோம். ஈழத்துப் பூதன்தேவனாரில் தொடங்கி இன்றுவரை எத்தனையோ இலக்கியவாதிகள் வாழ்ந்திருக்கின்றார்கள். ஆனால் அவர்களை அடையாளம்காண எம்மிடம் ஆதாரங்கள் இல்லாமையால் இந்திய மண்ணுக்கு இவர்களை இரையாக்கிவிட்டோம். இந்த நிலைதான் இந்த ஆதாரங்களைத் தொலையவிடுவதாலும் ஏற்படும்.

நல்லூர் இராசதானி இருந்தது என்பதற்கும் தமிழ் மன்னர் ஆட்சி இடம்பெற்றது என்பதற்கும் ஆதாரங்கள் எதிர்காலத்தில் இல்லையென்றால் அரசியல் அங்கீகாரங்கள் கிடைத்தாலும்கூட வந்தேறு குடிகள் தமிழர்கள்தான். கோப்பாயில் கோட்டை இருந்தமைக்கான ஆதாரங்களைத் தொலைத்துவிட்டோம். இதனைப் பாதுகாப்பதற்கான பல முயற்சிகள் எடுத்தும்கூட பலரின் சுயநலப் போக்கின் சூழ்ச்சியால் அது தோற்றுப் போய்விட்டது. இதே நிலைதான் மந்திரிமனை யமுனாஏரி - கந்தோரண வாயிலுக்கும் விரைவில் ஏற்படும்.

தமிழ் - பௌத்தர்கள் வாழ்ந்த புனித பூமி கந்தொரேடை என்பது வரலாற்றுப் பக்கத்தில் இன்று திசைமாற்றப்பட்டுவிட்டது. இதே போன்று தமிழர் மரபுரிமைகள் ஒவ்வொன்றும் திட்டமிட்டு திசை திருப்பப்படுகின்றன. இந்த இடங்களில் நாம் விழிப்புடன் இல்லையானால் விரைவில் தமிழ் மன்னர் அடையாளங்களும் சிதைக்கப்படுவது திண்ணம். மத்திய அமைச்சுக்கூடான நிதி ஒதுக்கீடு தமிழ் மன்னர் விடயத்தில் கிடைக்காது. அதனை எதிர்பார்த்து காலத்தை வீணடிப்பது மடமைத்தனம். பல தடவை பல ஆமோதிப்புகள் ஏற்பட்டும்கூட பல பக்கங்களின் அழுத்தங்களால் புனரமைப்புகள் புறந்தள்ளப்பட்டுவிட்டன. ஆகவே அரச சார்பற்ற பொதுநிறுவனங்களுக்கூடான நிதி ஒதுக்கீட்டில் இதை நிறைவேற்ற எத்தனிக்க வேண்டும். இருப்பினும் தொல்பொருளியல் திணைக்களத்துக்கு சொந்தமாக இருப்பதால் இதன் அனுமதி அரசியல்வாதிகளுக்கு ஊடாகவே பெறப்பட வேண்டும்.

புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்) இலக்கியப் படைப்புக்கள், விமர்சனங்கள், கலை, கலாசார நிகழ்வுகள், நூல்வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளை பிரசுரிக்க அனுப்ப வேண்டிய முகவரி:
புதன்பொய்கை உதயன், 361.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். மின்னஞ்சல் முகவரி: puthanpoigai@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐயோ யாழ்ப்பாணமே!

மருத்துவர் ஆறுமுகநாதன்
அமெரிக்கா


# புலம்பெயரியின் புலம்பல்

அமெரிக்காவிலிருந்து சில வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணம் திரும்பிய எனக்கு எஞ்சியது ஏமாற்றம்தான். நான் பிறந்து - மண்ணழைந்து - வளர்ந்த மண் இப்போது எப்படி இருக்கின்றதோ என்ற கனவுகளுடன் வந்த எனக்கு யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை தூக்கிவாரிப் போட்டது.

என் யாழ்ப்பாணத்தை - அன்றைய மிடுக்கான யாழ்ப்பாணத்தை - நேர்மையான கற்றறிந்தவர்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணத்தை இம்முறை காண்பது குதிரைக் கொம்பாகவே ஆகிவிட்டது.

நான் பார்ப்பதும், நிற்பதும் யாழ்ப்பாணத்தில்தானோ என்று என்னால் நம்பவே முடியவில்லை. கட்டாக்காலி நாய்களும், மாடுகளும் மிகுந்து திரியும் தெருக்களைப் பார்க்கிறேன். அவற்றின் எச்சங்களாலும், வெற்றிலைத் துப்பல்களாலும் யாழ்ப்பாணத்தின் தெருக்கள் அலங்கோலமாக்கப்பட்டிருந்தன. அவற்றைக் காணும்போது வயிறு குமட்டியது.

அத்துடன் நிர்ணயிக்கப்படாத விலைகளை மையப்படுத்திய மோசடியாளர்களும், ஏமாற்றுக்காரர்களும், பணப்புடுங்கிகளும் யாழ்ப்பாணத்தின் நன்மதிப்பை இப்போது கெடுத்துக் கொண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஓட்டோக்களுக்கான கட்டணங்கள் ஆட்களைப் பார்த்தே நிர்ணயிக்கின்றார்கள். உள்ளூர் வாசிகளுக்கு ஒரு விதமாகவும், வெளிநாட்டுக்காரர்களுக்கு ஒருவிதமாகவும் விலைகளையும் கட்டணங்களையும் அறவிடுகின்றார்கள். வெளிநாட்டுக்காரர்களுக்கு கட்டணத்தை நிர்ணயிக்கின்றனர் என்பதைவிட அவர்களைப் பணம் பறிக்கும் வாய்ப்பாகவே பார்க்கின்றனர் பயன்படுத்துகின்றனர்.




இப்போதைய இளைஞர்களும் யுவதிகளும் தவறான வழிகளில் செல்கிறார்கள் என்று ஒரு அன்பர் என்னிடம் வருத்தப்பட்டார். உதாரணத்துக்கு இளம் சந்ததியினர் போதைப் பொருள்களுக்கு அடிமையாவதையும் போதைப் பொருள்கள் வீட்டு வாசலுக்கே வந்துவிட்டதாகவும் கவலைப்பட்டார். நான் வளரும்போது எமது மூத்த சந்ததியினர் எம்மை நேர்வழியில் வழிநடத்திப் பாதுகாத்ததை மிகுந்த பெருமையுடனும் நன்றியுணர்வோடும் இங்கு நினைவுகூர்வது அவசியம் என்று நினைக்கின்றேன்.

எங்கள் உள்ளூர்க் கோயில் பல வருடங்களாகப் பராமரிக்கப்படாமல் மதில்கள் பாசிபிடித்தும் கேணி தூர்ந்துபோயும் இருந்தது. அப்போதுதான் ஓய்வுபெற்று வந்த ஊர்ப் பெரியோர் சிலர் கோவில் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றனர். அவர்களின் ஊக்குவிப்பில் இளைஞர் நாம் செய்த முதற்பணி கோவிற் கேணியைச் சுத்திகரித்ததே. சேறும் சகதியும் குப்பை கூழங்களும் நிறைந்து கிடந்த கேணி புதுக்கேணியானது. அடுத்து உள்வீதியும் வெளிவீதியும் துப்புரவாக்கப்பட்டு மதில்கள் கட்டப்பட்டன.

அத்துடன், திருட்டுகள் ஊரில் அதிகரித்ததால் பெரியோரின் அறிவுறுத்தலில் இளைஞர்கள் ஒரு கண்காணிப்புக் குழுவைத் தொடங்கினோம். ஒவ்வொருநாளும் நாலு அல்லது ஐந்துபேர் இரவில் திருட்டு நடந்த நேரங்களில் ஊரிலுள்ள வீதிகளில் ரோந்து புரிந்தோம். ஐமிச்சமான பேர்வழிகளை நிறுத்தி விசாரித்தோம். திருட்டுகள் நின்றன. இப்படிப் பெரியோர்களின் அறிவுரையாலும் எமது சொந்த முயற்சியாலும் நாம் இளைஞர்கள் ஊருக்குச் செய்த பணிகள் ஏராளம், ஏராளம். அடுக்கிக் கொண்டே போகலாம். இதை ஏன் இங்கு கூறுகிறேன் என்றால் ஊர்ப் பெரியோரின் வழிநடத்துதல் இளைஞர் சமுதாயத்தை எப்படிப் பாதுகாக்கும் என்பதை வலியுறுத்தவே.

வெகு விரக்தியுடன் கூறுகின்றேன். தேவர்கள் முன்னே ஆண்ட யாழ்ப்பாணம் இப்போது அசுரர்கள் கையிலகப்பட்டுவிட்டதோ என்று வெறுப்புத்தான் வருகிறது. நான் ஏன் திரும்ப இங்கு வரவேண்டும்? என்று குழப்பமாய் இருக்கிறது. இப்பூமி நான் வாழ்ந்த பழைய சொரக்கபூமியாய் எப்போது மாறும்? ■

---

உலக சனத்தொகை தினம் ஜூலை 11ஆம் திகதியாகிய நேற்றையதினம் கடைப்பிடிக்கப்பட்டது. அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# உலகை உலுக்கும் சனத்தொகை



இன்றைய காலங்களில் உலகை அச்சுறுத்தும் பெரும் பிரச்சினையாக சனத்தொகைப் பெருக்கம் காணப்படுகின்றது. கட்டுப்பாடற்ற மக்கள் தொகைப் பெருக்கமானது, மக்களின் அடிப்படைத்தேவையான உணவு, உறைவிடம், பயிர்செய்யும் நிலம், மருத்துவவசதி, கல்விவசதிகள் மற்றும் சமூகநல வசதிகளில் இந்த நூற்றாண்டில் பற்றாக்குறையை உருவாக்கியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகவ உள்ளது.

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ஆம் திகதி உலக சனத்தொகை 500 கோடியை எட்டியது இதையடுத்தே அந்த ஆண்டுமுதல் உலக சனத்தொகை தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. உண்மையில் இந்தத் தினம் அறிவிக்கப்பட்டதன் பின்னணி விழிப்புணர்வு நடவடிக்கைகளைக் காரணமாகக் கொண்டேயாகும்.

ஒருநாட்டில் ஏற்படும் அதிவேக சனத்தொகை வளர்ச்சியானது அங்கு உணவு கிடைக்கும் அளவு மற்றும் சமுகநலக் காரணிகளை மட்டும் பாதிக்கும் நிலையன்று. மாறாக நாட்டின் ஒட்டுமொத்த இயற்கை வளங்களில் தாக்கத்தைச் செலுத்தும். இதனால் எதிர்காலச் சந்ததியினருக்கு வளப்பற்றாக்குறை ஏற்படும்.

பண்டைய வரலாற்றின் அடிப்படையில் நோக்குவோமாயின் சனத்தொகைப் பெருக்கம் வரவேற்கத்தக்க ஒன்றாகக் காணப்பட்டது. சனத்தொகையின் இருப்பு அந்த நாட்டின் பலமாகக் கருதப்பட்டது. அத்துடன், அந்தக் காலங்களில் தொடர்ச்சியான போர்கள் இடம்பெற்றமையால், மக்கள் தொகைப் பெருக்கம் ஊக்குவிக்கப்பட்டது. திருமணம் செய்வது கட்டாயக் கடமைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. அதிக குழந்தைகளைப் பெறும் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர். பிரமச்சாரியம் தண்டனைக்குரிய குற்றமாகக்கூட இருந்தது.

10ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மக்கள் தொகைப் பெருக்கம் உணவுப் பெருக்க வேகத்தை மிஞ்சிவிட்டது. அதாவது உணவு உற்பத்தி கூட்டல் வீதத்தில் அதிகரிக்க, சனத்தொகைப் பெருக்கம் பெருக்கல் வீதத்தில் அதிகரித்தது. 19ஆம் நூற்றாண்டில் பெருமளவான வளர்ந்த நாடுகளான மேற்கத்தேய நாடுகளில் பிறப்பு வீதம் சரிவடையத் தொடங்கியது. இதற்குத் தொழில் மற்றும் தொழில்நுட்பப் புரட்சிகளும் ஒரு காரணமாக இருந்தது. ஆனால், வளர்ந்து வரும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் பிறப்பு வீதம் தொடர்ந்து ஏறுமுகத்திலேயே இருந்தது. இதனால், இந்த நாடுகள் பல்வேறு இடர்பாட்டைச் சந்தித்தன. உதாரணமாக சுற்றுச்சூழல் மாசடைவு, பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினை மற்றும் மனிதனின் சராசரி ஆயுட்காலத் தீர்மானிப்பு என்று எதிலும் இந்தச் சனத்தொகைப் பெருக்கம் தாக்கம் செலுத்த ஆரம்பித்துள்ளது.

எனவே சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த கிராமங்களில் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி மேம்படுத்த வேண்டும், உள்நாட்டு வெளிநாட்டு இடம்பெயர்வுகளைக் கட்டுப்படுத்த வேண்டும், ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வதற்கு நிலம் வழங்வேண்டும், வருமானம் குறைந்தவர்களுக்கு கல்வி, மருத்துவத்தை முழுமையாகவும், இலவசமாகவும் அரசு வழங்குவதோடு இவற்றுக்கு காப்புறுதித்திட்டத்தை செயற்படுத்தவேண்டும், பெண் கல்வியை ஊக்குவிக்க வேண்டும், திருமண வயதை அதிகரிக்க வேண்டும், முதியோருக்கான மருத்துவ மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்க மேம்படுத்த வேண்டும். இல்லையேல் சனத்தொகைப் பெருக்கம் வரும்காலங்களில் ஒட்டுமொத்த உலகுக்கும் பெரும் தலையிடியாக அமையும். ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளை அதிகம் வதைக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் கண்ட குழந்தைக் கவிஞர்கள்

பத்மா இளங்கோவன்

ஈழத்து இலக்கியப் படைப்பில், முத்திரை பதித்து நல்ல பல ஆக்கங்களைத் தந்த பல்வேறு படைப்பாளிகள் தொடர்பாக உதயன் புதன்பொய்கையில் கடந்த வாரம் பிரசுரமான ஆக்கத்தின் தொடர்ச்சியே இது...

கதைப் பிரியர்களான குழந்தைகள் இசையோடு, கதையும் பாடலுமாகக் கிடைக்கும்போது விருப்புடன் மகிழ்வு பொங்க அபிநயித்துப் பாடுவார்கள். குழந்தைகளுக்கு வேண்டிய அரிய கருத்துகளைக் குழந்தை மொழியில் எளிதாகக் கொடுக்கிறார் கவிஞர் பா.சத்தியசீலன். அவருடைய **'கெட்டிக்காரன் என்றாலும்...'** என்ற பாடலில், முயல் ஆமை ஓட்டப் பந்தயத்தை அழகான இசைப் பாடலாக நகர்த்தும் விதம் அழகு.

**'கெட்டிக்காரன் என்றாலும் எட்டிப் பிடிக்க முடியாதே சுட்டித் தம்பி ஆமை அதோ தொட்டு விட்டார் கம்பத்தை...'**

தமிழ் இலக்கண இலக்கியப் புலமையுள்ள தமிழாசிரியர் பண்டிதர் க. வீரகத்தி குழந்தைகளுக்கான **'தங்கக் கடையல்'** என்னும் இனிய பாடல் தொகுதியைத் தந்துள்ளார். இனிமையும், எளிமையும் கொண்ட சிற்றடிகள் இவருடையவை. குழந்தைகள் மனனம் செய்வதற்கு இலகுவானவை. இவரது **'பந்து'** என்னும் பாடலில்... **'அப்பா தந்த பந்து அருமையான பந்து ஓங்கி ஓங்கி அடிப்போம் ஓடி ஓடிப் பிடிப்போம்...'** என இயற்கையாகவே விளையாட்டில் ஆர்வம் உள்ள குழந்தைகளுக்கு இவ்வகைப் பாடல்கள் மிகவும் பிடித்திடும். இவரது இன்னொரு பாடலான **'கிளிப் பாடல்'** மிக அருமை. அழகான ஓசை நயத்துடன் கிளிகளைப் பற்றி குழந்தைகளுக்கு இனிதாகச் சொல்கிறார்.

**'பூனைகள் என்றால் பயப்படுமாம் பூவையர் என்றால் வயப்படுமாம் காயும் பிஞ்சும் கொறிப்பதுவாம் கனிந்த பழங்கள் கோதுவதாம்...'** எனப் குழந்தைகள் விரும்பிப் பாடத்தக்க வகையில் பாடலை அழகாகப் படைத்திருக்கிறார் கவிஞர்.

இவ்வாறு நம்மிடையே வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கும் பல கவிஞர்களின் படைப்புகள் நம்மால் மறக்க முடியாதவை. தற்காலத் தொழில்நுட்ப அறிவு வளர்ச்சிக்கேற்ப இன்றைய குழந்தைக் கவிஞர்களின் பாடல்கள் காலத்திற்கேற்றவாறு குழந்தைகளின் விவேகம், மூளை வளர்ச்சிக்கேற்ப படைக்கப்படுகின்றமை வரவேற்கத்தக்கது. இன்றைய உலகில் குழந்தைகள் ஆராய்ச்சித்திறம் அதிக படைத்தவர்களாகவும் உண்மையை ஆராய்ந்து தெளிபவர்களாகவும் உள்ளனர். எனவே அவர்களுக்கு ஏற்புடையதாக இன்றைய குழந்தை இலக்கியவாதிகள் செயற்படுவது மகிழ்ச்சிக்குரியதே. இன்றுள்ள குழந்தைகள் எதிலும் நவீனத்தையும், புதுமைகளையுமே வரவேற்கிறார்கள்.

அன்று பேராசிரியர் க.கைலாசபதி குழந்தை இலக்கியம் பற்றி குழந்தைகளின் வயது, அவர்கள் மொழித்திறன், அவர்களது ஏற்புடமை, அவர்தம் மூளை வளர்ச்சி இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு பாடல் புனைந்தோர் பொதுவில் குறைவு, என்றே அபிப்பிராயப்பட்டார். உண்மைதான். அன்றுள்ள நிலைமை அப்படி என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் இன்றுள்ள கவிஞர்கள் குழந்தைகளின் மனவெழுச்சிக்குத்தக்கதாக, அவர்களின் கேள்விகளுக்குப் பதில் கொடுக்கும் விதமாகப் பாடல் புனையும் நிர்ப்பந்தத்தில் உள்ளனர். அதற்குத் தகுந்தவாறு இன்றைய கவிஞர்கள் விழிப்புணர்வுடன் செயற்படுகின்றார்கள் என்பது மறுப்பதற்கில்லை.

உள்ளதை உள்ளபடி கலைத்துவத்துடன் சொல்வது வளர்ந்தோர் இலக்கியம். ஆனால் குழந்தை இலக்கியப் படைப்பில் வெற்றி பெறுவதென்பது பகீரதப்பிரயத்தனமே. அதிலும் இன்றைய குழந்தைகளுக்கு இலக்கியம் படைப்பதென்பது மிகமிகச் சிரமம் என்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். 'கலைகள் இலக்கியங்கள் நல்லதைச் சொல்ல வேண்டும். ஆனால் நல்லதைச் சொல்வதெல்லாம் கலைகளாகவும் இலக்கியங்களாகவும் ஆகமுடியாது.

எதர்க்கும் கலைத்துவம் வேண்டும்' எனவே விழிப்புணர்வு பெற்ற நம் குழந்தை இலக்கியவாதிகள் குழந்தை இலக்கியத்தை நளினமாக, நகைச்சுவையாக, புதிய புதிய உத்திகளுடன், புதிய புதிய கருத்துகளை இன்னும் அதிகமாகப் புகுத்திக் கலைத்துவத்துடன் எமது குழந்தைகளுக்கான படைப்புகளைத் தருவார்களாக. அதுவே எமது சந்ததியின் வெற்றிக்கு வழிவகுக்கும்.

குழந்தை இலக்கிய முன்னோடியான கவிமணி தேசிகவி நாயகம்பிள்ளையின் பாடல்கள் குறிப்பிடத்தக்கன.

இன்றளவும் குழந்தைகளால் விரும்பிப் பாடப்படும் **'தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு'** இவரது புகழ் பெற்ற பாடலாகும்.

1915ஆம் ஆண்டில் சுப்ரமணிய பாரதியாரின் 'ஞான பானு' பத்திரிகையில் குழந்தைப் பாடல்கள் வெளியாகின. இவற்றிற்கு முன்பே இலங்கையில் 1886 ஆம் ஆண்டில் கவிஞர் தம்பிமுத்துப்பிள்ளையின் 'பாலியக்கும்மி' என்ற குழந்தைப் பாடல் நூல் படைக்கப்பட்டது. இந்த வரிசையில் வாந்து மறைந்த வாழ்ந்து கொண்டிருக்கும் கவிஞர்கள் இலைமறை காயாக ஏராளம். அவர்கள் திறமை அபாரம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல் கிடைத்த ஒரு சிலரது பாடல்களையே இங்கு கண்டோம். கட்டுரை நீட்சி கருதிச் சுருக்கமாகவும் கண்டோம்.

இவ்வாறு இன்றைய குழந்தைகள் இலக்கியச் சோலைகள் தழைத்தோங்க, குழந்தை இலக்கியவாதிகளும் குழந்தைக் கவிஞர்களும் பல்கிப்பெருகி இன்னும் பலப்பல புதிய அரிய படைப்புகளைப் பாடல்களை தந்திடட்டும். இன்றைய குழந்தை இலக்கியங்களின் வளர்ச்சியே நாளைய பெரும் பெரும் காவியங்களுக்கு வித்தாகும். இன்றைய குழந்தை இலக்கியச் சோலைகளே நாளைய பெரும் பெரும் கலை இலக்கிய விருட்சங்களை ஆக்கும்..! ■

**ஒருங்கிணைந்த வடமாகாணத்தின் தலைமைச் செயலாளர் அமரர் சி.ரங்கராஜாவின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

# தன்னிகரற்ற பணியாளன் சிவகுருநாதன் ரங்கராஜா

சுந்தரலிங்கம் தியாகலிங்கம்



அமரர் சி. ரங்கராஜா ஒருங்கிணைந்த வடகிழக்கு மாகாணசபையின் தலைமைச் செயலாளராக செயலாற்றிய செயல்வீரர். நிர்வாகச் சிக்கல், இன முரண்பாடுகள், பிரதேச வாதம், மதவாதம் எனும் பிரச்சினைகள் எதுவுமே தலை தூக்காதவாறு மிகவும் சாதுரியமாக கடமையைக் கையாண்டவர்.

அந்தச் சபையின் கடைசித் தலைமைச் செயலாளராகவும் வடமாகாணத்தின் முதலாவது தலைமைச் செயலாளராகவும் இருந்து இவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. விதந்து போற்றுதற்குரியன.

'விளையும் பயிரை முளையில் தெரியும்' என்பார்கள்.

இவரது பிறந்து வளர்ந்த பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயச் சூழல் இவரது பண்புவிருத்தியை உருவாக்கியது. அறிவுவிருத்தியை பொன்னாலை வித்தியாலயம் ஏற்படுத்தி புலமைப்பரிசில் பெற்று யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரியில் சாதாரணதரம் வரையில் கற்று, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் உயர் கல்விபெற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்று பட்டதாரியானார். நிதிமுகாமைத்துவம் போன்ற விடயங்களில் சுயகற்றலின் மூலம் தனது கல்வியை விரிவுபடுத்தினார்.

1970 ஏப்ரல் 16ஆம் திகதி எழுதுவினைஞராக அரச சேவையில் இணைந்தார். 1977இல் இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்து கிழக்கு மாகாணத்தில் அட்டாளைச் சேனை, சம்மாந்துறை ஆகிய இடங்களில் உதவி மாவட்டச் செயலராகக் கடமையாற்றினார். அம்பாறை மாவட்டச்செயலகத்தில் தலைமைக் காரியாலய உதவி மாவட்டச் செயலராகவும் மன்னார், வவுனியா மாவட்டங்களில் உதவித் திட்டப் பணிப்பாளராகவும் மன்னார் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திப் பிரதித் திட்டப் பணிப்பாளராகவும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார். 1992ஆம் ஆண்டில் வட கிழக்கு மாகாண சபையின் உருவாக்கத்தின்போது மாகாணசபையின் திட்டமிடற் பிரதிச் செயலாளராகவும், பின்னர் திட்டமிடல் பிரதிப் பிரதம செயலாளராகவும், ஆளுநரின் செயலாளராகவும், 2002 -2006ஆம் ஆண்டு வரை வடகிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளராகவும் 2007இலிருந்து வடமாகாணசபையின் தலைமைச் செயலாளராவும் கடமையாற்றினார்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் வீறுபெற்று நடந்த காலத்தில் பல சோதனைகளையும் வேதனைகளையும் எதிர்கொண்டே தமது பணியினைச் சிறப்பான முறையில் ரங்கராஜா மேற்கொண்டார். மக்கள் நலச் சிந்தனையும் ஆன்மிக ஆற்றலும் ஒருசேரப்பெற்று தனது பணியை மேற்கொண்டமையை அவரோடு உடன் பணியாற்றியவர்களும் கல்விமான்களும் புகழ்ந்துரைப்பர். சைவநெறியின் பால் ஆழ்ந்த ஈடுபாடுடையவர். ஆயினும் சகல சமயங்கள், மார்க்கங்கள் தொடர்பான தெளிவுமிக்கவராக நுணுக்கமான ஆன்மிக ஞானம் வாய்ந்தவராக எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் தனது கடமையைச் செவ்வனே செய்தார்.

இயற்கை இடர்களான 1978ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் அழிவுகளையும், 2004ஆம் ஆண்டில் வட கிழக்கில் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட சுனாமி அழிவுகளையும் மற்றும் காலத்துக்குக் காலம் வெள்ளப்பெருக்கு, வரட்சியால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளில் துயர் துடைப்பதிலும் புதுவாழ்வு கொடுப்பதிலும் மீள மக்கள் எழுச்சிபெறுவதிலும் பெரும் பணியாற்றியவர். உள்நாட்டு போர்க் காலத்தில் இடம்பெயர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்களின் நலம் பேணுவதிலும் மீள் குடியேற்றங்கள் செய்வதிலும் பாதிக்கப்பட்ட மக்களின் உணவு, பாதுகாப்பு, அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் நிலைபேறான வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதிலும் நீண்டகாலமாகச் செயற்பட்ட கர்ம வீரர் ரங்கராஜா எனலாம்.

நான்கு தசாப்தங்கள் இலங்கை நிர்வாகசேவையில் உயரிய சேவையை நல்கி, பேரம்பேசலில் சிறந்த அதிகாரியாகவும் திகழ்ந்தவர். வடக்கு- கிழக்கில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான் சர்வதேச உதவித் திட்டம், குவைத் நிதி மற்றும் பல்வேறு நாடுகளின் உதவிகளுடன் பல நடுத்தர பெரிய திட்டங்கள் முன்னெடுப்பதில் பேரம் பேசி, அமுல்படுத்தி கண்காணிப்பதில் செயற்பட்டவர். பல சிறிய, நுண் திட்டங்களை முன்னெடுத்து மக்களின் வாழ்வு மேம்பட பாடுபட்டவர். மக்கள் சார் மேம்பாட்டில் மாத்திரம் அன்றி யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராக இருந்து பல்கலைக்கழக நிர்வாகம் சீராக இயங்குவதற்கும் தன் பங்களிப்பை வழங்கினார். வலி. மேற்கு பிரதேசசபை கட்டட அமைப்பை உருவாக்குவதற்கான நிதி ஒதுக்கீட்டில் இவரது பங்காற்றுகை குறிப்பிடத்தக்கது.

ஜனநாயகத்தின் கூறுகளாக பிரதிநிதித்துவ ஜனநாயகம், பங்கேற்பு ஜனநாயகம் என்பன அமையும் என்பர். சிறந்த ஜனநாயகச் செயற்பாடு என்பது தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளோடு மட்டுப் படாமல் நிர்வாக அதிகாரிகள் பங்கேற்பு ஜனநாயகத்தைச் செயற்படுத்துபவர்களாக இருக்கவேண்டும். அவ்வகையில் ரங்கராஜா சிறந்த முன்னுதாரணம் மிக்கவர். அவரைப் பின்பற்றி நிர்வாக அதிகாரிகள் மக்கள் நலனை முன்னுதாரணமாக கொண்டு கடமையாற்றவேண்டும்.

அன்னாரின் நினைவாக பொன்னாலையில் நினைவாலயம் நிறுவவேண்டும் என்பது பொதுமக்கள் பலரின் எண்ணமாகும். அத்தகு நினைவாலயமானது நூலகமும் ஒன்றுகூடல் மண்டபமும் பூங்காவும் இணைந்ததாக பொன்னாலை மூளாய் மக்களுக்கு பயன்தரு நினைவாலயமாக அமையவேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைவேள்வியில் குளிர்ந்தது யாழ்ப்பாணம்



கே.எஸ்.சிவஞானராஜா

இலங்கைக் கம்பன் கழகம் நடத்திய, ஸ்ரீராம நாம கானாம்ரித இசைவேள்வி நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் அண்மையில் அரங்கேறியது. இந்தியக் கலைஞர்களும், இலங்கைக் கலைஞர்களும் கலந்து சிறப்பித்த மிகப்பெரிய இசை வேள்வியாக யாழ்ப் பாணத்தில் நடைபெற்றமையால் நல்லூர் நாதமயமாகி, உலகையே ஈர்த்தெடுத்தது.

இசையையும் இறைவனையும் இன்பத் தமிழினையும் மனதார நம்பிக் கெட்டவர்கள் என்று எவரும் இருக்க முடியாது. நான்கு நாள்களும் சுமார் நூறு சங்கீத உருப் படிகளை இரு நாட்டுக் கலைஞர்களும் தேன்சொட்டப் பாடி யிருப்பது மட்டுமல்ல, நம்மண் அனுபவித்திருப்பதும் நாம் செய்த பாக்கியமேயாகும். நல்லூரில் சொட்டிய தேனிசை, யாழ்ப்பாணத்தைக் கடந்து வடபுலத்தையே இனிக்கவும் வசீகரிக்கவும் செய்தது.

சங்கீத சாம்ராஜ்ஜிய பிரபல்யங்களான இந்தியக் கலைஞர் கள் அபிஷேக் ரகுராம், நெய்வேலி சந்தான கோபாலன், எஸ்.சௌமியா, அருண சாய்ராம் மற்றும் எம் நாட்டு சங் கீத பிரபல்யங்களான பரமேஸ்வரி கணேசன், சுகன்யா அரவிந்தன், சாய்லட்சுமி வர்ஜிகன் ஆகியோரின் அற்புத மான தேனிசை மழையால் இசைவேள்வி அதிசயமாகிற்று. அடேயப்பா! அபூர்வ இராகங்கள், ஆனந்த இராகங்கள், ஜனரஞ்சக இராகங்கள், கனநய தேசிய இராகங்கள், ஜனக ஜன்னிய முதன்மை இராகங்கள் தழுவிய பல்வகைச் சுவை சொட்டும் கல்பித மனோதர்ம உருப்படிகள் மண்ணையும் விண்ணையும் கவர்ந்து, தெய்வீக வாழ்வை இரசிகப் பெரு மக்களுக்கு நல்கி, இன்பக் கடலில் மூழ்கடிக்கச் செய்தது மட்டுமல்ல மெய்சிலிர்க்குமாறு சொல்லவும் வைத்தது. ஒருபடி மேல் சென்று தியாகராஜர் இசை ஆராதனை மிக வும் பக்திபூர்வமாகப் பேறளித்தது.

சங்கீதமானது, சுருதி லயம் ஒன்றித்து, பாடகரோடு பின் னணி வாத்தியக் கலைஞர்களும் இணைந்து சங்கமிக்கும் போது ஏற்படும் ஆனந்த சுகானுபவத்தைக் குறிப்பதாகும். அத்தோடு இரசிகப் பெருமக்களும் அதனை ஆழ்ந்து அகன்று சூழ்ந்திடும்போது அந்த சுகத்தைச் சொல்லவும் வேண்டுமா? ஆயிரம் சபாஷ், பேஷ், பலே வாழ்த்துகளைக் கொள்ளை கொண்ட இசை அரங்குகள் இவை என்று மார்தட்டிக் கூறிவிடலாம்.

முதல்நாள் அபிஷேக் ரகுராமின் வராளி இராகம் தந்த சௌபாக்கியம் அளப்பரியது. இரண்டாம் நாள் மேடையில் அனைவருமே சாகசம் புரிந்தனர். அது நெய்வேலியின் முத்திரை பளிச்சிட்டது. மூன்றாம் நாள் சௌமியாவின் தோடி இராக உருப்படியில் நாம் கைதியானோம்.

நான்காம் நாள் அருணா சாயிராமின் ஆபோகி இராக உருப்படி ஒட்டுமொத்த அரங்கையே கதன குதூகலமாக் கிற்று.

எட்டுக் கலைஞர்களின் இசை ஆளுமை திசையெட்டையும் கட்டிப்போட்டு இரசிக்க வைத்தது. பக்க வாத்தியங்களுக்குப் பதக்கம் சூடி மகிழ வேண்டும். ஆம்! எந்தவித குழப்பமு மின்றி மிகவும் அமைதியோடு இரசிகர்கள் இசையை மிகவும் இரம்மியமாக இரசித்தமை யாழ். மண்ணின் வர மாகும். ஒலியமைப்பு பலே! இசை வேள்வியால் நல்லூர் நனைந்தது. யாழ். மண் குளிர்ந்தது. பிரம்மாதம்! அடுத்த வேள்வி 2024இல் எப்போது?

---

# யாழ்ப்பாணத்தின் பெருமைமிகு பண்பாட்டு விழா!



யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பண்பாட்டு விழா கடந்த மாதம் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை, யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் தலைமை யில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடனும், பிரதேச கலாசாரப்பேர வையும், பிரதேசசெயலகமும் இணைந்து பண்பாட்டு விழாவை ஒழுங்கமைத்திருந் தன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அம்பலவா ணர் சிவபாலசுந்தரன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிர திப்பணிப்பாளர் திருமதி. இராஜமல்லிகை சிவசுந்தரசர்மா, கௌரவ விருந்தினராக கலாபூஷணம் குருசுமுத்து இராயப்பு (கலையார்வன்) ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## நிகழ்வுகள்

காலை 8:30 மணியளவில் யாழ். பழைய பிரதேச செயலக முன்றிலில் இருந்து ஆரம்பமான பேரணியில் பிரதம விருந் தினர், கௌரவ விருந்தினர் உள்ளிட்டோரும், பிரதேசத்தின் கலைகளை வெளிக்கொணரும் முகமாக ஆலவட்டம். குடை பரிவாரங்களுடன் கிராமிய நடனம் மற்றும் மங்கள வாத்தியங் களுடன் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்.கொழும்புத் துறை இந்து மகா வித்தியாலயம், யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயம், யாழ்.வண்ணை நாவலர் வித்தியாலயம் மற் றும் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்களும், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமூகமட்ட பிரதிநிதிகள், கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். யாழ்.பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவைத்தலை வருமான சாம்பசிவம் சுதர்சன் பிரதேசத்தின் கலைகளை வெளிக்கொணரும் செயற்பாட்டில் ஆர்வத்துடன் பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது. 'அமரர் தோமஸ் அருள்ராசா அரங்கில் மண்டபம் அலங்கரிக்கப்பட்டதுடன் மங்கள இசை யுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகளால் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டதோடு, கலாசாரப் பேரவைக் கீதமும் இசைக் கப்பட்டது. தொடர்ந்து உதவிப் பிரதேச செயலாளரினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டதோடு. அரங்கத்திறப்புரையை பத்திநாதன் சுதாகரன் நிகழ்த்தினார். மேலும், வண்ணைக் கலாமன்றத்தினரால் நடத்தப்பட்ட வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து பிரதேச செயலாளரால் தலைமையுரையும் வழங்கப்பட்டது.

இதேவேளை வரலாற்றிலும் இதிகாசத்திலும் யாழ்ப்பாணம் பற்றிய கதை எனும் நூல் வெளியீடும் இடம்பெற்றிருந்தது. ஆங்கில மொழி எழுத்தாளரான வாழ்நாள் மானிடவிய லாளரான எம்.டி.இராகவன் எழுதிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு யாழ். மாவட்டச் செயலக அரசாங்க மொழி பெயர்ப் பாளரான திருமதி பிரபாகரன் நித்தியகலாவால் மொழிபெ யர்ப்புச் செய்யப்பட்டு, பிரதம விருந்தினரால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூலுக்குரிய அறிமுகவுரையை அபிவிருத்தி உத்தியோகத் தர் சி.குருபரநாத் நிகழ்த்தியிருந்தார். மேலும் இந்தநூலில் யாழ்ப்பாணத்தில் நாக இராச்சியம், யாழ்ப்பாணத்தில் ஆரி யச்சக்கரவர்த்திகள், அந்தகக்கவியாகிய பாணன் மற்றும் யாழ்ப்பாணக் குடியேற்றம் பற்றிய புராணக்கதை, யாழ்ப்பா ணத்தில் போர்த்துக்கேயர், யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர், யாழ்ப்பாணத்தில் ஆங்கிலேயர், கட்டடக்கலையில் பிரித்தா னியரின் பங்களிப்பு முதலான ஏழு தலைப்பிலான ஆய் வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அணிவகுத்தன கலை நிகழ்வுகள்

அதனைத் தொடர்ந்து யாழ். கதீஜா மகா வித்தியாலய மாண விகளால் இஸ்லாமிய நடன நிகழ்வு அரங்கேற்றப்பட்டது. மேலும் பிரதேசசெயலக உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட நகைச்சுவை நாடகமும் காட்சிப்படுத்தப்பட்டது. இதேவேளை பாசையூரில் இயங்கிவரும் பாசெய்யூர் கலையகத்தினரால் வின்சன்ட் லலிதா தம்பதிகளின் மிகச்சிறப்பான தாண்டவ நடனமும் இடம்பெற்றிருந்தது. ஜோசப் ஜோன்சன் ராஜ்கு மாரின் எழுத்துருவில் உருவாகிய இளங்கலைஞர் அன்றூ யூலியஸின் நெறியாள்கையில் யாழ்ப்பாண பிரதேச இளங் கலைஞர்களால் கும்பகர்ணன் தென்மோடி நாட்டுக்கூத்தும் மிகச்சிறப்பாக மேடையேற்றப்பட்டு பலரது பாராட்டுக்களை யும் பெற்றது.

## கலைஞர்கள் கௌரவிப்பு

மேலும் யாழ் பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் யாழ் பாடி 7ஆவது சிறப்பு மலரும் பிரதம விருந்தினரால் வெளி யிட்டு வைக்கப்பட்டது. இந்தநூலின் வெளியீட்டுரையை சட் டத்தரணி ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ நிகழ்த்தியிருந்தார். இதனைத் தொடர்ந்து யாழ்.பிரதேச கலைஞர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன்போது பிரதேச கலைஞர்களான அலெக்ஸ்சாண்டர் அன்ரனி (கூத்து தென்மோடி), எமிலியா னூஸ் அன்ரன் எல்மோ (நாடகம்), அந்தோனிப்பிள்ளை லிகோரி (நாடகம்), அம்பலவாணர் ஸ்ரீஸ்கந்தராசா (கவிதை) ஆகிய நால்வருக்கு 'யாழ்.ரத்னா' விருது வழங்கி வைக்கப் பட்டது. மேலும், சகாயதாசன் டெனிக்சன் (கவிதை), திருமதி பார்த்தீபன் பானுகா (கவிதை), திருமதி விஜிந்தன் மதிவதனி (இசை வயலின்), ஜீவதாஸ் ஜீவிதன் (கிராமியக்கலை) ஆகி யோருக்கு 'இளங்கலைஞர்' விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டது. மேலும் 2021 - 2023 வரை வெளியிடப்பட்ட யாழ்பாடி மலரின் அட்டைப்படத்தை வடிவமைத்த கலைஞர் சகாதேவன் ஷதுர்ஷன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட் டார். மேலும், யாழ். பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட திருக்குறள் போட்டி மற்றும் மாண்புறு மாணவ சமுதாயம் எனும் கருப்பொருளில் நடத்தப்பட்ட திறன் விருத்தி போட்டிக ளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. பிரதேச கலாசார உத்தியோகத்தர் இ.ஜோன்சனால் வழங்கப்பட்ட நன்றியுரையுடன் பண்பாட்டு விழா சிறப்பாக நிறைவு பெற்றது. இவ்வாறாக யாழ்ப்பாண பிரதேசத்தின் கலைகளை வெளிக்கொணரும் முயற்சியில் யாழ். பிரதேசசெயலகம் முன்னின்று செயற்பட்டு வருவது பலரது வரவேற்பையும் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரவிப்பு


யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிராந்திய குருதிவங்கியின் ஏற்பாட்டில் குருதிக் கொடையாளிகளையும் குருதிக் கொடை முகாமை ஒழுங்குபடுத்துபவர்களையும் கௌரவிக்கும் விசேட நிகழ்வு யாழ்ப்பாணம் தாதியர் கல்லூரியில் கடந்த மாதம் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

100 குருதிக் கொடையாளர்களுக்கும் குருதிக்கொடை முகாமை ஒழுங்குபடுத்தும் 50 பேருக்கும் இதன்போது கௌரவமளிக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, மருத்துவமனை அதிகாரிகள், குருதி வங்கி உத்தியோகத்தர்கள், தேசிய குருதிமாற்று பிரயோக சேவையினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு குருதிக் கொடையாளருக்கு கௌரவம் வழங்கினர்.

(ய-20-66)

# விழிப்புணர்வு



சர்வதேச போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு யாழ்.மாதகல் சென்.தோமஸ் வித்தியாசாலையில் போதை ஒழிப்பு, மகிழ்ச்சியான குடும்பம், முறைப்பாட்டுப் பொறிமுறை தொடர்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த 26ஆம் திகதி திங்கட்கிழமை சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்களால் நிகழ்த்தப்பட்டது.

(ய-66)




# திறப்பு விழாவும் உதவி வழங்கலும்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சமூக சேவையை மேற்கொண்டுவரும் வி.பி. பவுண்டேசனின் தலைமை அலுவலகம் விசுவமடு நகர்ப் பகுதியில் கடந்த 26ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இதன்போது பாரதி மகாவித்தியாலயம்,தேராவில் தமிழ்க்கலவன் பாடசாலை, விசுவமடு மகா வித்தியாலயம் என்பவற்றைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

(ய-19)



போதை ஒழிப்பு தினத்தையொட்டி தென்மராட்சிப் பிரதேசசெயலக சமுர்த்தி அலகினால் பிரதேச சமுர்த்தி வலயங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி கடந்த 26ஆம் திகதி திங்கட்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி மற்றும் வரணி சமுர்த்தி வலயங்களைச் சேர்ந்த சமுர்த்திப் பயனாளிகளின் பிள்ளைகள் இப்போட்டியில் அணிகளாக களமிறங்கினர். இறுதிப் போட்டியில் சாவகச்சேரி சமுர்த்தி வலய அணி சம்பியனாகி வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டது.

(ய-9)



தருமபுரம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட வன்னியூர் ஸ்ரீ சபரி ஐயப்பன் ஆலயத்தின் கும்பாபிஷேகப் பெரும்சாந்திப்பெரு விழா கடந்த 28ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

(ய-113)


## தேவை

பொதிகள் சேவை நிறுவனத்திற்கு உதவியாளர் தேவை.

A/L குறைந்த தகைமையாகும். நல்லூர்.

[illegible]

விரும்பத்தக்கது. கிளிநொச்சியில் உள்ள நிலையத்திற்கு

ஆண் உதவியாளர் தேவை.

074 200 1214, 070 330 5500



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



### நல்லம்மா நாகராசா

தச்சன்தோப்பு. வேலம்பிராயைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லம்மா நாகராசா 10.07.2023 திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அவுர்வம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசதுரை - கனகம்மா தம்பதியரின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற நாகராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரையப்பா, சரஸ்வதி மற்றும் சிவஞானம், காலஞ்சென்ற பேரானந்தம் மற்றும் சுந்தரலிங்கம், காலஞ்சென்ற முத்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சகுந்தலாதேவி, காலஞ்சென்ற தேவராசா மற்றும் ஜெயராசா, காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் ஆனந்தராசா ஆகியோரின் மைத்துனியும் சுதாகரன், சசிகரன், விஜிகரன், ராஜ்கரன் ஆகியோரின் பாசமிகு தாயும், மகிஜா, ஸதீபா, ராதா, நித்தியா ஆகியோரின் மாமியும், நகிர்ஜன், வர்ஷா, இனிஷா, அட்ஷயா, ஆதித், விஷ்வி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2023) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்


**பரலோக மாதா வீதி,**
**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

**தகவல் :-**
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 - 08 - 1934



மறைவு 23 - 06 - 2022

## அமரர் சின்னையா பஞ்சலிங்கம்

திதி: தசமி (12.07.2023)

ஆண்டொன்று ஆனதோ அப்பா
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து...
புன்னகை பூத்த உங்கள் முகம் - என்றும்
எம் மனக்கண்ணில் நிழலாடும்
பாசமான வார்த்தைகள் - என்றும்
எம்மைப் பின் தொடரும்
பசுமையான உங்கள் நினைவுகள் - என்றும்
அழியாது எம்மை விட்டு.......

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (CS/51217)AH- குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 24 • 12 • 1950



மறைவு 12 • 06 • 2023

யாழ். புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் சரஸ்வதி குணலிங்கம்

அம்மா என்ற எங்களின் உயிர்மூச்சு அகிலத்தை விட்டு பிரிந்து மாதம் ஒன்று வந்தும்
அழுத கண்ணீர் காயவில்லை அம்மா எங்கள் அழுகையும் தீரவில்லை எமக்கு
உங்களின் பிரிவு என்றும் சோகமே எமக்கு தாயே தந்தையை பிரிந்து தவித்த போதெல்லாம்
தாயும் தந்தையுமாய் தாங்கி நின்றீர் அம்மா கலகலப்பாய் இருந்த எங்கள் இல்லமும்
இன்றோ இருள் சூழ்ந்து காட்சி தருகின்றதே அப்பாவோடு ஒன்றாய் கலந்திட இறையருளை
நித்தம் வேண்டித் துதிக்கின்றோம் தாயே ஓம்சாந்தி!

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் (10-07-2023) திங்கட்கிழமை அன்று மு.ப 08.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (12-07-2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் யாழ். அத்தியடி அருள்மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப்பிள்ளையார் கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்..!**

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்**

வீட்டு முகவரி:
இல. 298, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம். (cs.51216) (N.1)

குடும்பத்தினர்
(மகன் - சயேசன்) 077 037 6428

# சனத்தொகைக் கணக்கெடுப்பு

கொழும்பு, ஜுலை 12

2023 - 2024 ஆண்டுகளில் மக்கள் தொகை மற்றும் வீட்டுமனை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் 2012ஆம் ஆண்டின் பின்னர் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (ம-ரி3)

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயரத்தினம் சூரியகுமாரி



தச்சந்தோப்பை பிறப்பிடமாகவும் சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயரத்தினம் சூரியகுமாரி நேற்றுமுன்தினம் (10.07.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் விஜயரத்தினத்தின் அன்பு மனைவியும், சுசீலா, பிருந்தா, கவிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், அம்பிகைபாகன், யசோதரன் , பிரதாப் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரவீன், லகிர்தன், துஷாந், அக்ஷயா, பிரணவி, திவியங்கா, அபினாத், அபிசாத் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2023) புதன் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பொற்கொல்லர் வீதி, சங்கத்தானை சாவகச்சேரியில் உள்ள அவரது மகளான சுசீலாவின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தச்சந் தோப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்கொல்லர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 10 . 1956



இறப்பு 10 . 07 . 2023

## ஆறுமுகம் லோகலிங்கம்

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் லோகலிங்கம் கடந்த (10.07.2023) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தநாயகி (சாந்தா) வின் அன்புக் கணவரும், (பிரான்ஸ்) வில்வராஜ் வினித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சத்தியராஜ் தீபிகா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், கிருஸ்மிதா, தஸ்மிதா, அனாமிகா (பிரான்ஸ்) அகரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 12.07.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியந்தோட்டம்,
மல்லாகம்.

தகவல்
குடும்பத்தினர்.
T.P:0777191906

(CS 25512) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தை காட்டுகிறீர்களா?



ஏழாலைப் பகுதியில் தொலைத்தொடர்புக் கோபுரம் வேண்டாம் என்று வலியுறுத்தி நேற்றையதினம் பெருமளவு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைப் பார்த்து 'வித்தை காட்டுகின்றீர்களா?' என்று கடிந்துகொண்டுள்ளார் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி.

ஏழாலை தெற்கு, புளியங்கிணற்றடி வீதியில் மக்கள் குடியிருப்புக்கள் மிக்க பகுதியில் தனியார் காணியொன்றில் பிரபல தொலைத்தொடர்பு நிறுவனமொன்றால் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கப்படுவதற்கு எதிராக சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை பொதுமக்களால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டம் ஆரம்பித்து சுமார் 45 நிமிடங்களின் பின்னர் அந்த இடத்துக்கு வருகைதந்த சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, 'சட்டத்தை மதிக்காமல் அடாவடித்தனமான முறையில் நீங்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றீர்கள்' என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைப் பார்த்துக் கடிந்து கொண்டார். எனினும் பொதுமக்கள் தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து, போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் ஒளிப்படங்கள் எடுத்தனர். (அ-ம-66)

# இந்திய வெளிவிவகாரச் செயலர்: ஜனாதிபதி ரணிலுடன் சந்திப்பு



கொழும்பு, ஜூலை 12

உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருக்கும் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் வினய் மோஹறன் குவத்ரா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப்பு அமைச்சில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்திக்கொண்டு, இரு நாட்டு மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் சமூக மற்றும் பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்காக அரசாங்கம் முன்னெடுத்து வரும் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் இந்திய வெளியுறவுச் செயலாளருக்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார நெருக்கடியின்போது இலங்கைக்கு, இந்தியா வழங்கி வரும் தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவித்தார். ஜனாதிபதியின் இந்தியப் பயணத்துக்கான ஏற்பாடுகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ம-125)

## சரத்...

முல்லைத்தீவு - குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவுக்கு முரணாகவும் சட்டவிரோதமாகவும் விகாரை அமைக்கப்பட்டுவரும் நிலையில், இது தொடர்பான வழக்கு முல்லைத்தீவு நீதிமன்றத்தில் கடந்த 4ஆம் திகதி அழைக்கப்பட்டது. வழக்கு விசாரணைக்காக நீதிபதி ரி.சரவணராஜா குருந்தூர்மலைக்குச் சென்றார். அவருடன் சட்டமா திணைக்களத்தின் அதிகாரிகளும் சென்றனர். நீதிமன்ற விசாரணைகள் குருந்தூர் மலையில் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு பிரசன்னமாகியிருந்த சரத் வீரசேகர, நீதிபதிக்குத் தன்னை அறிமுகப்படுத்தி கருத்துக்கூற முற்பட்டார். நீதிமன்ற விசாரணை இடம்பெறும் போது கருத்துக்கூறுவதற்கு இடமில்லை என்று தெரிவித்த நீதிபதி, வீரசேகரவின் கருத்துக்களை ஏற்கமறுத்தார். அதன் பின்னர் நாடாளுமன்ற அமர்வில், நீதிபதி ரி.சரவணராஜாவுக்குக் கண்டனம் தெரிவித்த சரத் வீரசேகர, 'இலங்கை ஒரு சிங்கள - பௌத்த நாடு என்பதை தமிழ் நீதிபதி மறந்துவிடக்கூடாது. குருந்தூர்மலையில் இருந்து எம்மை வெளியேற்றிய முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. தொல்பொருள் தொடர்பில் ஆராயும் அதிகாரம் அவருக்கு இல்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக நீதிபதிகளும் செயற்படுகிறார்கள்' என்று இனவாதத்தைக் கக்கியிருந்தார்.

இந்த நிலையிலேயே வீரசேகரவின் கருத்துக்களுக்கு எதிராகவும், நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்க வலியுறுத்தியும் வடக்குமாகாண சட்டத்தரணிகளால் நேற்றையதினம் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சட்டத்தரணிகளின் போராட்டம் காரணமாக நேற்றையதினம் பல வழக்குகளின் விசாரணைகள் இடம்பெறவில்லை. அநேகமாக வழக்குகள் திகதியிடப்பட்டன.

முல்லைத்தீவைச் சேர்ந்த சட்டத்தரணிகளும், வடக்கின் இதர பகுதிகளில் இருந்து சென்ற சட்டத்தரணிகளும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்துக்கு முன்பாக ஒன்றுகூடி போராட்டத்திலும் ஈடுபட்டனர். நீதிமன்றத்தின் சுயாதீனத்தை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள். (அ-ம-19,26,66,246,27)

## ரூ. 1.5 மில்...

சிறிசேன உள்ளிட்டோரை இழப்பீடு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், மைத்திரிபால சிறிசேன இதுவரை 1.5 மில்லியன் ரூபாவை இழப்பீடாகச் செலுத்தியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்காக இழப்பீட்டைச் செலுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பாதுகாப்புத் துறையில் முக்கியமான பொறுப்புக்களில் இருந்த அதிகாரிகளுக்கும் (நிலாந்த ஜயவர்த்தன, ஹேமசிறி பெர்னாண்டோ, சிசர மெண்டிஸ், பூஜித ஜயசுந்தர) எதிராக நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையிலேயே 100 மில்லியன் ரூபா செலுத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்த மைத்திரிபால சிறிசேன இதுவரை 1.5 மில்லியன் ரூபா இழப்பீட்டைச் செலுத்தியுள்ளார். மிகுதிப் பணமான 85 மில்லியன் ரூபா 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி முதல் 2033ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 10 தவணைகளாகச் செலுத்தப்படும் என்று அவர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளார்.

அப்போதைய பாதுகாப்புப் படைகளின் பிரதானி நிலாந்த ஜெயவர்த்தனவுக்கு 75 மில்லியன் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் நிலாந்த ஜெயவர்த்தன எதுவித இழப்பீட்டையும் இதுவரை செலுத்தவில்லை. பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும் பாதுகாப்புப்படைகளின் பிரதானியுமான ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு 50 மில்லியன் ரூபா செலுத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் அவர் ஒரு மில்லியன் மட்டுமே செலுத்தியுள்ளார். குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளர் சிசிர மெண்டிஸுக்கு 10 மில்லியன் ரூபா செலுத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் அவர் 5 மில்லியன் ரூபா மட்டுமே செலுத்தியுள்ளார். பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு 75 மில்லியன் ரூபா செலுத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் அவர் 1.75 மில்லியன் ரூபாவே செலுத்தியுள்ளார். (அ-ம-22.6)

## நேற்றைய...

மாவட்ட நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற போராட்டத்தை புலனாய்வாளர்கள் என்று சந்தேகிக்கும் நபர்கள் ஒளிப்படங்களை எடுத்து அச்சுறுத்தியுள்ளனர்.

நீதிபதிகளுக்கு எதிராகவும், நீதிமன்றத்தின் சுயாதீனத்தைக் கேள்விக்குட்படுத்தும் வகையிலும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அண்மையில் வெளிப்படுத்திய கருத்துக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்துக்கு முன்பாக சட்டத்தரணிகளால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தையே புலனாய்வாளர்கள் என்று சந்தேகிக்கும் நபர்கள் ஒளிப்படம் எடுத்துள்ளனர். அரசாங்கத்துக்கு எதிராக முல்லைத்தீவில் இடம்பெறும் போராட்டங்களில் புலனாய்வாளர்களின் தலையீடு அண்மைக்காலமாக அதிகரித்தே உள்ளது. கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வின்போதும் புலனாய்வாளர்கள் பலர் அங்கு நின்று ஒளிப்படங்களைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-19)

## நீதித்துறைக்கு...

சட்டத்தையும் நீதித்துறையின் சுயாதீனத்தையும் பாதுகாப்பதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் செயற்பாடுகள் நீதித்துறை மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதாகவும், நீதித்துறையை அச்சுறுத்துவதாகவும் அமைந்துள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கும் கருத்து அவர்களது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறுவதாக அமைந்துள்ளன.

இம்மாதம் 7ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து நீதித்துறை மீதான மோசமான தாக்குதல். அத்துடன் சமூகங்களுக்கிடையே பிளவை உண்டாகும் செயற்பாடு. எதுவித உள்ளக, வெளியக தலையீடுகளுமின்றி நீதித்துறை சுயாதீனமாகச் செயற்பட வேண்டுமென்பதே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிலைப்பாடு. ஒரு ஜனநாயக கட்டமைப்புக்கு சுயாதீனமான நீதித்துறை அவசியம் என ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள, நீதித்துறையின் சுயாதீன செயற்பாடுகளை சகல அரசாங்க நிறுவனங்களும் மதிக்கவேண்டும். எந்தவித உள்ளக, வெளியகத் தலையீடுகளுக்கும் இடம் கொடுக்காமல் பக்கச்சார்பின்றி நீதித்துறை இயங்கவேண்டும். அந்த வகையில் ஆளும் - எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் சுயாதீன நீதித்துறையை கண்காணிக்கவும் மதிக்கவும் வேண்டும். அதை விடுத்து நீதித்துறையில் தலையீடு செய்வது மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதுடன் இவ்வாறான நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றுள்ளது. (அ-ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேட்டோவில் உக்ரைன்: சம்மதித்தது துருக்கியே

## வெளுத்தது சாயம்

**அங்கரா, ஜூலை 12**

**ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் சுமார் ஒன்றரை ஆண்டுகளாகப் போர் இடம்பெற்றுவரும் நிலையில், நேட்டோவில் உக்ரைன் இணையும் முயற்சியை ஆதரித்துள்ளது துருக்கியே.**

ரஷ்யாவுக்கு எதிரான போரில், தன்னைப் பலப்படுத்துவதற்காக இராணுவ உதவிகளைக் கோருவதற்கு உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி ஐரோப்பிய நாடுகளுக்கு தற்போது சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக அவர் துருக்கியேவுக்கும் சென்றுள்ளார். துருக்கியேவில் ஷெலன்ஸ்கியை வரவேற்ற எர்டோகன், நேட்டோவில் உக்ரனை இணைவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்.

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் முழுமையான தகுதியுடைய நாடு என்றும் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் சமரசம் பேசும் நாடாக துருக்கியே இருந்தது. இதன்போது துருக்கியேவால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை ரஷ்யா கண்டித்ததுடன், இந்த நிபந்தனைகள் உக்ரைனுக்குச் சார்பானவையாக இருக்கின்றன என்றும் உக்ரைனைப் பலப்படுத்துவதற்காக துருக்கியே நடுவர் போன்று போலியாகச் செயற்படுகின்றது என்றும் சாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம)

# வடமராட்சி வடக்கு மீனவருக்கு ஒதுக்கப்பட்ட நிதி இடமாற்றம்!

வடமராட்சி வடக்குப் பகுதியில் கடற்கரையில் படகு கட்டும் பகுதிகளைத் தூர்வார்வதற்காக, நிறுவனமொன்று சுமார் ஒன்றரைக்கோடி ரூபா பணத்தை வழங்க முன்வந்த போதிலும், யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் அசமந்தத்தால் அந்தப் பணம் தற்போது பிறிதொரு பகுதிக்கு இடமாற்றப்பட்டுள்ளது என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவரும், யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளன முன்னாள் உபதலைவருமான நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திலிருந்து நாம் எந்தவிதமான முன்னறிவிப்புக்களோ அல்லது குற்றச்சாட்டுக்களோ இன்றி நீக்கப்பட்டோம். வடமராட்சி வடக்குப் பகுதியில் கடற்கரையில் படகு கட்டும் பகுதிகளைத் தூர்வார்வதற்காக, நிறுவனமொன்று சுமார் ஒன்றரைக் கோடி ரூபா பணத்தை வழங்க முன்வந்தது. எனினும் அது யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் அசமந்தத்தால் இல்லாமற்போயுள்ளது. வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தைத் தற்போது ஒரு கட்சி தம்வசம் வைத்திருக்கின்றமையே இதற்கெல்லாம் காரணம். இதை எமக்கு உதவி வழங்கவிருந்த நிறுவனத்துக்கு நான் குறிப்பிட்டிருந்தேன்.

தற்போது கட்சியொன்று சமாசத்தை நடத்துவதால் சமாசம் ஊடாக எம்மால் கடிதம்தர முடியாது. எமது 14 சங்கங்களின் நிர்வாகிகளிடமும் கையெழுத்துக்கள் பெற்று உங்களுக்கு கடிதம் தருகின்றோம் எனத் தெரிவித்தபோது, உங்களுக்கு மேலுள்ள அமைப்பு ஒரு கட்சிக்கு கீழ் இயங்குவதால் எமக்குப் பல சிக்கல்கள் ஏற்படுமெனத் தெரிவித்து அந்த நிறுவனம் எமக்கு உதவுவதை நிறுத்தி மட்டக்களப்புக்குச் சென்றுள்ளது. இதனால், எமக்காக ஒதுக்கப்பட்ட ஒன்றரைக் கோடி ரூபா மட்டக்களப்புக்கு மாற்றப்படவுள்ளது.

அதேபோன்று யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அன்னராசா கடற்றொழில் கூட்டமொன்றுக்காகத் தாய்லாந்து சென்றிருந்தார். இந்தக் கூட்டத்தில் 12 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து இரண்டு நாடுகள் 200 படகு இயந்திரங்களும், வலை உபகரணங்களும், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளும் வழங்குவதற்கு முன்வந்தன. எனினும், சம்மேளனத்தை ஒரு கட்சி நடத்துகின்ற காரணத்தால் அந்த உதவிகளும் தற்போது எங்களுக்கு கிடைக்காமல் போயுள்ளன. கடற்றொழிலாளர்களுக்கு கிடைக்கவேண்டிய பல உதவிகளும் தற்போது கிடைக்காமற் போயுள்ள நிலையில் சங்கங்கள் ஏன் மௌனம் காக்கின்றன? - என்றார்.

(ம-26,27,66)

# ஜப்பான் கடலுணவுக்கு தடை விதித்தது சீனா!

ஜப்பானின் கடலுணவுகளுக்குத் தடை விதித்துள்ள சீனா.

ஜப்பானின் புகுஷிமா அணுமின் நிலையத்திலிருந்து சுமார் 10 லட்சம் மெற்றிக்தொன் இரசாயனக் கழிவுகளை கடலில் திறந்துவிடவுள்ளது. இந்தத் திட்டத்துக்குக் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள சீனா, கதிரியக்கப் பாதிப்பைத் தவிர்ப்பதற்காக ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கடலுணவுகளுக்குத் தடை விதித்துள்ளது.

ஜப்பானின் கடலுணவு ஏற்றுமதியின் பெரும்பங்கு சீனாவையே சார்ந்துள்ளது. இந்தத் தடை ஜப்பானின் பொருளாதாரத்தை ஆட்டம்காணச் செய்யும் என்று வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை ருனா வகை மீன்களை அதிகளவில் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஜப்பானும் ஒன்றாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


**மேல் மாடி வீடு விற்பனைக்கு**

✓ யாழ். மானிப்பாயில் 2 பரப்பில் அமைந்த லக்சறி வீடு (மேல்மாடி) சகல தளபாட வசதிகளுடன் விற்பனைக்குண்டு.
✓ 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

077 102 2763

**வேலையாட்கள் தேவை**

கொடிகாமம் கெற்பேலி பகுதியில் அமைந்துள்ள பண்ணைக்கு ஆண் வேலையாட்கள் தேவை. தங்கி நின்று வேலை செய்ய வேண்டும், சம்பளமாக 53,105/=. (மொத்த EPF,ETF அடங்கலாக)

தொடர்புகளுக்கு:

076 586 4967

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

ஆங்கில பேச்சு பயிற்சி மற்றும் கணினிகற்கை நெறி இலவசம்
ஏதாவது ஒரு கற்கைநெறியை கற்போருக்கு

UASL . UK இன் ISO Certificate

- Diploma in Computer Hardware
- Diploma in Television Media and Mass Communication
- Diploma in Aari Work

Victory
No.100, 2nd Floor,
Manipay Road, Jaffna.
தொடர்பு: 077 028 8711

(cs.25502) (N.I)

**மணமகள் தேவை**

01. பருத்தித்துறை, இந்து கௌரவகுலம் (V), 1975, மிருகசீரிடம், Supermarket Manager, Divorce, UK Citizen மண மகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 34587
02. மானிப்பாய், இந்து கௌரவகுலம் (V), 1978, உத்தராடம், BSc (Hons) Divorce, Australia Citizen. மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33259
03. பளை, இந்து கௌரவகுலம் (V), 1984, அவிட்டம் Phd, UK Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
04. காரைநகர், இந்து கௌரவகுலம் (V), 1986, சித்திரை, BSc in Information and Communication Technology, UK Citizen. மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27042
05. கரவெட்டி, இந்து கௌரவகுலம் (V), 1986, திருவோணம், BA (Hons), CIMA Completed UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 26504
06. நெடுந்தீவு, இந்து கௌரவகுலம் (V), 1978, பூசம், A/L, Own Business, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 25258
07. காரைநகர், இந்து கௌரவகுலம் (V), 1975, விசாகம், MSc, UK Citizen. மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 25104

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Phone - 077 539 3728
Whatsapp - 077 803 8193
(CS/51212)AH-I

**காணி வாடகைக்கு**

B.A தம்பி ஒழுங்கையில், K.K.S வீதியில் இருந்து சுமார் 400m தூரத்தில் சுற்றிவர மதிலுடன் கூடிய அறிக்கையுள்ள 1 1/4 பரப்புக் காணி வாடகைக்கு உண்டு. கராஜ், ஒட்டுத் தொழிலகம் முதலியன அமைக்கலாம்

தொடர்புகளுக்கு:

சி. பிரகாஷ்: 077 127 8122

**விற்பனைக்கு**

கடையில் பாவித்த
Bottel Cooler, Deep Freeze,
மின்பிறப்பாக்கி,
மின்சாரத்தில் இயங்கும்
ஆட்டுக்கல் போன்றவை
விற்பனைக்குண்டு.

தொடர்பு: 076 553 0813

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 09 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* சுன்னாகம் சாவகச்சேரி செல்லும் அரச, தனியார் பேருந்துகள் பயணிக்கும் பிரதான வீதி.
* 1 பரப்பு ஒரு லட்சத்தி ஐம்பதுஆயிரம் மட்டும்.
பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.

தொடர்பு: 076 8260 354, 076 0570 354


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.